விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 27
ஒலி 195 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 18 வியாழக்கிழமை (02.07.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## யாழ். மாநகர சபையின்
# புதிய கட்டடப் பணிக்காக ரூ. 1,958 மில்லியன் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய கட்டடப் பணிகளை நிறைவு செய்வதற்காக 1,958 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த பொருளாதார நெருக்கடி காரணமாக பாதியில் கைவிடப்பட்டிருந்த யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய கட்டடத் தொகுதிப் பணிகளை 15ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா மாநகர சபையின்
# முன்னாள் முதல்வர் உட்பட நால்வரைக் கைது செய்ய உத்தரவு

(வவுனியா)

வவுனியா மாநகர முன்னாள் முதல்வர் உட்பட நான்கு பேரைக் கைது செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதாக வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஆர்.எம்.யே.எஸ்.ரத்னமலலா தெரிவித்துள்ளார்.

வவுனியா மாநகரசபையின் செங்கோல், பதக்கம் மற்றும் முதல்வர் ஆடை என்பன 15ஆம் பக்கம் பார்க்க

## 78 கிலோ கஞ்சாவுடன் வவுனியாவில் ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியா பெரியகுளம் பகுதியில் 78 கிலோ கிராம் கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நெடுங்கேணிப் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது காரில் 15ஆம் பக்கம் பார்க்க

## மாகாண சபைத் தேர்தலை
# விரைவில் நடத்துவதே அரசின் எதிர்பார்ப்பு
### அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

இழுபறியில் உள்ள மாகாண சபைத் தேர்தலை மிக விரைவில் நடத்துவதே அரசாங்கத்தின் முதன்மை எதிர்பார்ப்பாகும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



## அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படமாட்டாது
### அமைச்சர் நளிந்த

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் இம்மாதம் முதல் நீடிக்கப்படமாட்டாது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். 15ஆம் பக்கம் பார்க்க

## பொருளாதார வளர்ச்சியை உயர்த்துவதே இலக்கு
### ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை எதிர்வரும் ஆண்டுகளில் 8 வீதம் வரை கொண்டு வருவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு 02ஆம் பக்கம் பார்க்க



## நயினைக் கடலில் தவறி விழுந்த பெண்
### காப்பாற்றிய கடற்படை வீரர்

(நயினாதீவு)

நயினாதீவு இறங்குதுறையில் லோஞ்சியில் ஏற முற்பட்ட பெண் பயணி ஒருவர் கடலில் தவறி விழுந்த சம்பவம் நேற்று (01) பிற்பகல் இடம்பெற்றது.

பிரஸ்தாபப் பெண் கடலில் வீழ்ந்த கணப்பொழுதில் அங்கு கடமையில் இருந்த கடற்படை வீரர் ஒருவர் 15ஆம் பக்கம் பார்க்க

## 12 சதவீதத்தால்
# பேருந்து கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

பேருந்துக் கட்டணத்தை 12 சதவீதத்தால் அதிகரிக்கப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## மிளகாய்த்தூள் வீசிவிட்டு குடும்பஸ்தர் மீது வாள்வெட்டு
### புங்குடுதீவு நாகதம்பிரான் ஆலயத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மிளகாய்த்தூள் வீசி விட்டு குடும்பஸ்தர் ஒருவர் மீது வாள்வெட்டுத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

புங்குடுதீவு நாகதம்பிரான் ஆலய வளாகத்தில் நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் புங்குடுதீவு மடத்துவெளியைச் சேர்ந்த முரளி கிருஸ்ணா என்பவரே வாள்வெட்டில் படுகாயமடைந்த 15ஆம் பக்கம் பார்க்க

## தெல்லிப்பழையில்
### விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில் விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மரணமடைந்துள்ளார்.

இதில் தெல்லிப்பழை சந்தை வீதியைச் சேர்ந்த 15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைத் துணைத்தூதுவர் தமிழக முதலமைச்சருடன் சந்திப்பு



(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜயை தென்னிந்தியாவுக்கான இலங்கைத் துணைத் தூதுவர் டாக்டர் கணேசநாதன் கதீஸ்வரன் நேற்று நேரில் சந்தித்து கலந்துரையாடினார்.

சென்னையிலுள்ள 15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நடக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

UKயில் வசிக்கும் 1988ம் ஆண்டு பிறந்த ரிஷபம் ராசி, ரோகிணி நட்சத்திரம் உடைய அழகான மணமகளுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு மணமகன் தேவை. (2476)

**077 335 3461**


## பொருளாதார...

என ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

தகவல் தொழில்நுட்பம், மின் மற்றும் இலத்திரனியல் துறைகளின் முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் துறையினருடன் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்து ரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி யைத் துரிதப்படுத்துவதற்காக அடுத்த ஆண்டில் மூலதனச் செலவாக 2 ட்ரில்லியன் ரூபாவை ஒதுக்க எதிர் பார்ப்பதாகவும் ஜனாதிபதி இதன் போது குறிப்பிட்டார்.

இதன்மூலம் ஏற்படும் டொலரின் தேவையை ஈடுசெய்ய ஏற்றுமதித் துறையின் அதிகபட்ச பங்களிப்பை அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது இலங்கையின் மூன்றாவது பெரிய ஏற்றுமதி வருமானத் துறையாக விளங்கும் தகவல் தொழில்நுட்பத்துறையின் மூலம் வருடத்திற்கு 5 பில்லியன் டொலர்களையும் மின் மற்றும் இலத்திரனியல் துறை மூலம் 2 பில்லியன் டொலர்களையும் ஈட்டும் சாத்தியக்கூறுகள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது. (ம-7)

## தெய்வேந்திர முனை நோக்கி நடை பயணம்



இலங்கையின் சுற்றுலா துறையை விரிவுபடுத்தும் நோக்கில் பருத்தித் துறை சக்கோட்டையில் உள்ள கொடிக் கம்பத்தில் இருந்து தெய்வேந்திர முனை நோக்கி நடை பயணம் ஒன்று நேற்று புதன்கிழமை (01) காலை 8.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தைச் சேர்ந்த 48 வயதுடைய அருண்மூன் மற்றும் நாவலப் பிட்டியைச் சேர்ந்த சுற்றுலா தொழில திபரான 51 வயதுடைய சரத் விஜய வர்த்தன ஆகிய இருவரும்இணைந்தே கடற்கரை வழியாக தமது பயணத்தை ஆரம்பித்துள்ளதுடன் இருவரும் ஆறு நாட்களில் தெய்வேந்திர முனையைச் சென்றடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)



## வேலைக்கு ஆட்கள் தேவை

பிரபல சைவ உணவகம் ஒன்றுக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- உணவு பரிமாறுபவர்கள் (ஆண் / பெண்)
- துப்பரவுப் பணியாளர் (ஆண் / பெண்)
- சமையல் உதவியாளர் (7961)

தொடர்பு - 070 664 7466, 077 469 6695


## கண்ணீர் அஞ்சலி



கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் தேவஸ்தான முன்னாள் நிர்வாக சபை உறுப்பினரும், பஞ்சகர்த்தாவும், முன்னாள் ஆலய பரிபாலனசபை தலைவரும், இவ்வருட ஆலய முகாமையாளருமாகிய

**அமரர் தெட்சணாமூர்த்தி சிவராஜலிங்கம்**
**(சிவம் அண்ணை)**

இவ்வுலக வாழ்வை இன்பமுடன் வாழ்ந்து நற் சேவைகளுடன் நற்பணிகள் பல புரிந்து இயற் கையெய்திய பெருமகனே தங்களினுடைய ஆத்மா கலட்டி அம்மனின் பாதார விந்தங்களில் சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

மண்ணில் 24.08.1947
விண்ணில் 29.06.2026

துயரில் பங்குகொள்ளும்....
கலட்டி அம்மன் தேவஸ்தான நிர்வாக சபையினர்,
(C-5962) இளைஞர் கழகத்தினர்.

## பதிலளிப்பதற்கு முன் நிதானியுங்கள்

ஒரு உணர்ச்சியான பதில் வெறுப்பின் அலையை பற்றவைக்கலாம்.
ஒரு நிமிட சிந்தனையின் மூலம் அதைத் தடுக்க முடியும்.

பகிர்வதற்கு முன் உங்களையே கேளுங்கள்:

- இந்த தகவல் உண்மையா?
- இதை பரப்புவதால் யாருக்கு நன்மை?
- இதனால் யார் பாதிக்கப்படலாம்?

அமைதியான சிந்தனை வெறுப்புப் பேச்சை தோற்கடிக்கும்.
சிந்தனை அமைதியைப் பாதுகாக்கும்.

இந்த தகவல் SOND அமைப்பினால், ஐ.நா. இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது. (7775)

## மரண அறிவித்தல்

### திரு.தெட்சணாமூர்த்தி சிவராஜலிங்கம்

**(ஓய்வுபெற்ற S.I.O உள்ளூராட்சித் திணைக்களம், முன்னாள் கலட்டி அம்மன் கோவில் தலைவர்)**



தோற்றம் 24.08.1947 மறைவு 29.06.2026


சீனியர் ஒழுங்கை, கலட்டியைப் பிறப்பிடமாகவும், 87, பொற்பதி வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தெட்சணாமூர்த்தி சிவராஜ லிங்கம் (ஓய்வுபெற்ற S.I.O உள்ளூ ராட்சித் திணைக்களம், முன்னாள் கலட்டி அம்மன் கோவில் தலைவர்) அவர்கள் கடந்த (29.06.2026) திங் கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் தெட்சணாமூர்த்தி - பொன்னம்மா தம்பதியரின் மகனும் துரைராஜசிங்கம் - அருளம்மா தம்பதி யரின் மருமகனும் விஜயலக்ஷ்மியின் அன்புக் கணவரும் சிவப்பிரியா, ரஞ்சிதா, லக்ஷி ஆகியோரின் அன்புத் தந்தையும் கரன், கஜீந்திரன் ஆகி யோரின் பெரியதந்தையும் மயூரன், குகநாதன், சிறிகேசவன், நர்மிஜா, ரம்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹரினா, ஹரினி, பிரித்திகா. விதுர்னன், பிரணவன், ஆராதனா, ஆதிரன், சஜீவ், சுடிக்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான புஜ்பராஜலிங்கம், புஸ்ப ரோசாமணி, தவராஜலிங்கம் மற்றும் மீனாம்பிகை, ஜெயராஜலிங்கம், ஜெயபாலன், ஜெயந்தி ஆகியோரின் சகோதரனும் இராஜசிங்கம், ஜெயபாலசிங்கம், சுகிர்தலக்ஷ்மி, செல்வகுமார், செல்வேந்திரன், மாலினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளு மாறு கேட்டுக் கொள்கின்றோம்.

87, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு. (7963)
தகவல்: குடும்பத்தினர்

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 03.06.2026 (புதன்கிழமை) அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவன்

**அமரர் நல்லதம்பி பத்மநாதன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (02.07.2026) வியாழக் கிழமை காலை 5.00 மணியளவில் அம்பன் பாலையடி வைரவர் ஆலய முன்றலில் இடம்பெற்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்பட்டு, வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (03.07.2026) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னா ரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங் கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்தி லும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பன், குடத்தனை. (2471)
தகவல்:- குடும்பத்தினர்
077 879 2905

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்கு காலணி வவுச்சர்

(கொழும்பு)

எதிர்வரும் 2027 ஆம் ஆண்டிற்காகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு காலணிகளை வழங்குவதற்கான திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் என்ற ரீதியில் பிரதமரினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கு இந்த அனுமதி கிடைத்துள்ளது.

தகுதியுடைய ஒவ்வொரு மாணவருக்கும் காலணிகளைக் கொள்வனவு செய்வதற்காக தலா 3,000 ரூபாய் பெறுமதியான வவுச்சர்கள் வழங்கப்படவுள்ளன.

2026 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட முறையைப் போன்றே இம்முறையும் விநியோகம் இடம்பெறும். (நி)

# டெங்கு காய்ச்சலால் அதிகரிக்கும் உயிரிழப்புகள்


(கொழும்பு)

**இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் இலங்கையில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 55,000 ஐத் தாண்டியுள்ளது என தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு அறிவித்துள்ளது.**

அதன்படி, இந்த ஆண்டில் இதுவரை பதிவாகியுள்ள மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 55,406 ஆக உயர்ந்துள்ளதுடன், மரணங்களின் எண்ணிக்கை 32 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் மட்டும் 1,024 டெங்கு நோயாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக டெங்கு ஒழிப்புப் பிரிவின் தற்காலிக இயக்குநர் வைத்தியர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார்.

ஜூன் மாதத்தில் மட்டும் 21,565 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.



இவர்களில் பெரும்பாலானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் 4 சீனர்கள் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுமார் 10.8 மில்லியன் ரூபாய் பெறுமதியுள்ள வெளிநாட்டு சிகரெட்டுக்களை நாட்டுக்குள் சட்டவிரோதமாகக் கடத்த முயன்ற நான்கு சீனப் பிரஜைகள் சுங்க அதிகாரிகளினால் அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது ஏற்பட்ட சந்தேகத்தின் பேரில் சுங்க அதிகாரிகள் அவர்களை இடைமறித்து சோதனையிட்டபோது, அவர்கள் கொண்டு வந்த 6 பயணப் பொதிகளுக்குள் மிகவும் இரகசியமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த சீனாவில் தயாரிக்கப்பட்ட 72,000 சிகரெட்டுக்கள் அடங்கிய 360 சிகரெட் கார்டன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (நி)

# எல் நினோ தாக்கத்தை எதிர்கொள்ளத் தயார்

### ஜனாதிபதி தலைமையில் அவசரக் கூட்டம்

(கொழும்பு)

எல் நினோ காலநிலை தாக்கத்தால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய விளைவுகள் மற்றும் அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அதிகாரிகளுடன் விரிவாக கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற தேசிய பேரிடர் முகாமைத்துவ சபைக் கூட்டத்தில் இந்த விடயங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளன.

அதன்படி, எல் நினோ கால நிலையை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள், பேரிடர் முகாமைத்துவ அமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் மற்றும் தேசிய பேரிடர் முகாமைத்துவ ஒருங்கிணைந்த பொறிமுறை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், விவசாயம், குடிநீர் விநியோகம் மற்றும் மின்சார உற்பத்தித்துறைகளின் தயார்நிலை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதற்கமைய, வனவிலங்கு சரணாலயங்களுக்குள் உள்ள குளங்களை விரைவாக புனரமைக்குமாறு சுற்றாடல் அமைச்சுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

நீர் மின் உற்பத்தியை தொடர்ந்து பேணுவதற்காக நீர்த் தேக்கங்களின் நீர் மட்டத்தை முறையாக முகாமைத்துவம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் இதன்போது ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். (நி)

# எரிபொருள் விலை குறைப்பு போதுமானதல்ல - ரவிகருணாநாயக்க

(கொழும்பு)

எரிபொருட்கள் தற்போது தட்டுப்பாடின்றி கிடைக்கப் பெறுவதால், கியூஆர் முறையை அரசாங்கம் நீக்க வேண்டும். அதேநேரம் உலக சந்தையில் குறைவடைந்திருக்கும் எரிபொருட்களின் கட்டணத்துடன் ஒப்பிடுகையில் எரிபொருட்களுக்கான விலை குறைப்பு போதுமானதல்ல என புதிய ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்க தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

பெற்றோல் மற்றும் டீசல் விலையை அரசாங்கம் குறைத்துள்ளது. ஒரு லீற்றர் பெற்றோல் 20 ரூபாவாலும் ஒரு லீற்றர் டீசல் 25 ரூபாவாலுமே குறைக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் உலக சந்தையில் தற்போது எரிபொருட்களின் விலை குறைவடைந்துள்ள வீதத்துடன் ஒப்பிட்டு பார்க்கையில் அரசாங்கத்தின் விலை குறைப்பு போதுமானதாக இல்லை.

ஏனெனில் உலக சந்தையில் விலை அதிகரிக்கும் போதெல்லாம் எமது நாட்டிலும் அதற்கு நிகராக விலை அதிகரிக்கப்பட்டது. அதனால் தற்போது உலக சந்தையில் விலை குறைவடையும்போது அதற்கு நிகராக விலை குறைவடைய வேண்டும். அதுதான் நியாயம். ஆனால் அவ்வாறு இடம்பெறவில்லை.

தற்போது உலக சந்தையில் எரிபொருட்களின் விலை குறைவடைந்துள்ள அளவுக்கு இங்கு விலை குறைவடையவில்லை என்பதே உண்மை.

அதேநேரம் நாட்டுக்கு எரிபொருள் கொண்டுவருவதில் தாமதம் ஏற்பட்டால், எரிபொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது.

அதனால் எரிபொருள் விநியோகத்தை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் கியூஆர் முறையில் எரிபொருளை விநியோகிக்க தீர்மானித்தது. ஆனால் தற்போது எந்த பிரச்சினையும் இல்லாமல் எரிபொருள் கிடைப்பதாக அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. அதனால் கியூஆர் முறையை அரசாங்கம் நீக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

## பரீட்சார்த்திகளுக்கான தேசிய அடையாள அட்டை

# விநியோகம் துரிதப்படுத்தப்படும்

### ஆட்பதிவுத் திணைக்களம்

(கொழும்பு)

நடப்பு ஆண்டில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களுக்கும் இந்த வருட இறுதிக்குள் நிரந்தர தேசிய அடையாள அட்டைகளை வழங்கி முடிப்பதற்குத் திணைக்களம் எதிர்பார்ப்பதாக அதன் பணிப்பாளர் நாயகம் ஜகத் ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதே வேளை சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் அடையாள அட்டை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சு ஊடாக ஏற்கனவே பாடசாலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, அதிபர்கள் எந்த வித தாமதமும் இன்றி இந்த விண்ணப்பங்களை திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள, இதுவரை அடையாள அட்டை கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர்கள், ஆட்பதிவுத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி எண்கள் அல்லது மின்னஞ்சல் முகவரிகள் ஊடாக திணைக்களத்தைத் தொடர்பு கொண்டு தங்களது அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தேசிய பரீட்சைகள் தொடங்குவதற்கு முன்னர் அனைத்து மாணவர்களும் செல்லுபடியாகும் அடையாள அட்டைகளை வைத்திருப்பதை உறுதி செய்வதே இந்த விசேட திட்டத்தின் நோக்கம் என ஆட்பதிவுத் திணைக்களம் மேலும் வலியுறுத்தியுள்ளது. (நி)

# மாற்றுத்திறனாளிகளுக்கு விசேட அடையாள அட்டைகள்

(கொழும்பு)

மாற்றுத்திறனாளிகளுக்கு விசேட அடையாள அட்டைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அரச நிறுவனங்களில் அவர்களுக்கு முன்னுரிமை சேவைகளை வழங்குவதற்காக இந்த அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய சபை இதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் உபாலி பன்னிலகே தலைமையில், இடம்பெற்ற நிகழ்வில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.


இதேவேளை மாற்றுத்திறனாளிகளை விளிக்கும்போது, பயன்படுத்தப்பட வேண்டிய சொற்களஞ்சியத்தை உத்தியோகபூர்வ மொழிகள் திணைக்களத்துடன் இணைந்து வெளியிடவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கே.சீ.சீ.சீ வெற்றிக் கிண்ணம் பற்றீசியன்ஸ் அணி வசம்!



சிறந்த பந்து வீச்சாளர்



சிறந்த களத்தடுப்பாளர்



சிறந்த துடுப்பாட்ட வீரர்


தொடர் நாயகன்

கே.சீ.சீ.சீ வெற்றிக்கிண்ண தொடரின் இறுதிப் போட்டி கடந்த 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் சென்றலைட்ஸ் அணிக்கும் பற்றீசியன்ஸ் அணிக்கும் இடையில் நடைபெற்றது.

குறித்த இறுதிப் போட்டியில் பற்றீசியன்ஸ் அணி சென்றலைட்ஸ் அணியை 58 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2026 ஆண்டிற்குரிய தொடரின் கே.சீ.சீ.சீ வெற்றிக்கிண்ணத்தை 4 ஆவது தடவையாக பெற்றுக் கொண்டுள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சென்றலைட்ஸ் அணி களத்தடுப்பை தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 38 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றது.

டிலப்ஸன் -16 , ஐவன்-27, நிலோஜன்-66, சியன்ங்சன்-33, லொயிட்-24, வினுஷாந்த்- 50, ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்ற லைட்ஸ் அணி சார்பாக டார்வின் 03 இலக்குகளையும் ஜேம்ஸ் ஜான்சன் 02 இலக்குகளையும் நியூட்டன் 02 இலக்குகளையும் ஜெனேஸன் ஒரு இலக்கையும் ஜெரிக் துஸார் 02 இலக்குகளையும் கைப்பற்றினர்.

254 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி 37.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 195 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

நியூட்டன் -25, டார்வின் 49, ஜெயதர்ஸன்-79 ஓட்டங்களை பெற்றனர்.




பந்து வீச்சில் டிலக்ஸன் 01 இலக்கினையும் டனிசீயஸ் 02 இலக்குகளையும்ரனிஷான் 01 இலக்கினையும் சன்ஜீவன் 03 இலக்கினையும் கவஸ்கர் 03 இலக்கினையும் கைப்பற்றினர்.

பரிசளிப்பு வைபவத்தில் சிறந்த துடுப்பாட்ட வீரராக சென்றலைட்ஸ் அணியைச் சார்ந்த ஜெயதர்ஸன் என்பவரும் சிறந்த பந்துவீச்சாளர் பற்றீசியன் அணியை சார்ந்த சன்ஜீவன் என்பவரும் சிறந்த களத்தடுப்பாளராக பற்றீசியன்ஸ் அணியை சார்ந்த வினுஷன் என்பவரும் சிறந்த வீரராக பற்றீசியன்ஸ் அணியை சார்ந்த வினுஷாந் என்பவரும் தொடரின் தொடர் நாயகனாக பற்றீசியன்ஸ் அணியை சார்ந்த டிலக்ஷன் என்பவரும் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் வெற்றி பெற்ற பற்றீசியன்ஸ் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் பணப்பரிசிலும் 2 ஆம் இடத்தை கைப்பற்றிய சென்றலைட்ஸ் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் பணப் பரிசிலும் வழங்கப்பட்டது. (3)


சேவை நலன் பாராட்டுவிழா




திரு.
சிதம்பரப்பிள்ளை கதிரவேல்
(கல்விசாரா ஊழியர்)

சேவை விபரம்
- 1997இல் தற்காலிக ஊழியர் : யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
- 2001 - நிரந்தர ஊழியர் : (யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி)
- 2010 - 2011 சிற்றூழியர் : (யா/சிதம்பரக்கல்லூரி,வல்வெட்டித்துறை)
- 2012 - 2026 சிற்றூழியர் : (யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி)


ஓய்வு காலத்தில் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

(C-5963)

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி.



1ம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு



கடந்த 14.07.2025 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவி

அமரர் வேலும்மயிலும்
மகாபார்வதி அம்மா

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதினம் இன்று (02.07.2026) வியாழக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(C-5964)

சிவன் கோவிலடி,
புதிய வீதி, வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல் : குடும்பத்தினர், பிள்ளைகள்
K.V.குகேந்திரன் (V.K. ஜெகன்)
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
076 744 0162


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளை அழிவுப் பாதைக்கு தள்ளியுள்ளது அநுர அரசாங்கம்

## எதிர்க்கட்சித் தலைவர் விசனம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு தற்போதைய அரசாங்கம் தொடர்ந்து பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகிறது. விவசாயிகளை இந்த அரசு முற்றாக ஏமாற்றி அழிவுப் பாதைக்கு தள்ளியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசனம் வெளியிட்டுள்ளார்.

இலட்சக்கணக்கான விவசாயிகளின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கத்தால் விவசாயிகளுக்குத் தேவையான தரமான உரங்களையோ அல்லது உரமானியத்தையோ முறையாக வழங்க முடியவில்லை.

சந்தையில் விவசாய உபகரணங்களின் விலையேற்றம், கிருமிநாசினிகளின் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம், தரமான விதைகள் இல்லாமை போன்ற பிரச்சினைகளுக்கு மத்தியில் விவசாயிகள் வாழ்கின்றனர்.

மேலும் யானை-மனித மோதல் உள்ளிட்ட வனவிலங்குப் பிரச்சினைகளுக்கு மத்தியிலும், விவசாயிகள் தங்களது நகைகளை அடகு வைத்து விவசாயம் செய்கின்றனர்.

ஆனால் செய்த செலவுக்கு ஏற்ற வருமானத்தை அவர்களால் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. இவ்வளவு இன்னல்களை எதிர்கொள்ளும் விவசாயிகளை ராஜாவாக்க அரசாங்கத்திற்குத் திறமையுமில்லை, தேவையும் இல்லை.



விவசாயிகளை அவமதிக்க அவமதிக்க, இந்த அரசாங்கத்தின் அரசியல் ஆன்மா அழிந்து போகும். இது மக்கள் வைத்த நம்பிக்கையை துரோகம் செய்யும் செயலாகும்.

எனவே, விவசாயிகளை அவமதிக்காமல் அவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறும், நெல்லுக்கான 150 ரூபாய் சான்றிதழ் விலையை சட்டமாக்குமாறும் வலியுறுத்துகிறேன்.

தற்போதைய அரசாங்கத்தால் இதனைச் செய்ய முடியாவிட்டால், அந்தப் பொறுப்பை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்றுக் கொண்டு, விவசாயிகளுக்கும் ஒட்டுமொத்த மக்களுக்கும் வளமானதொரு நாட்டை கட்டியெழுப்ப தயாராக உள்ளது எனத் தெரிவித்துள்ளார். (நி)

### மாகாணமட்ட பளுதூக்கல் போட்டி

# கீரிமலை நகுலேஸ்வர ம.வி.க்கு இரண்டு வெள்ளிப் பதக்கங்கள்



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான பளு தூக்கல் போட்டியில் கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம் இரண்டு வெள்ளிப் பதக்கங்களை கைப்பற்றியுள்ளது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான பளுதூக்கும் போட்டி அண்மையில் யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இதில் யா/கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ர.சயணிகா (17 வயது) 40 கிலோ எடைப் பிரிவில் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும் சு. சங்கவி 45 கிலோ எடைப்பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (3-90)

# வருமான வரி அறிக்கை சமர்ப்பிக்கும் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

2025/2026 மதிப்பீட்டு ஆண்டுக்கான வருமான வரி அறிக்கைகளை சமர்ப்பிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய வருமான வரிக்காக பதிவு செய்து கொண்டுள்ள அனைத்து தனிநபர்களும் தங்களது வருமான வரி அறிக்கைகளை சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வரி செலுத்துவோர் தங்களது வரி அடையாள இலக்கத்தை பயன்படுத்தி, இணையவழி ஊடாக இந்த அறிக்கைகளை சமர்ப்பிக்க முடியும் எனவும் அந்த திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

மேலும் வருடாந்த வருமானம் 1.8 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமாக உள்ள அனைத்து தனிநபர்களும் வருமான வரி செலுத்த வேண்டியவர்கள் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

# சுகீஸ்வர பண்டாரவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் முன்னாள் தனிப்பட்ட செயலாளரும், புதிய மக்கள் முன்னணியின் தலைவருமான சுகீஸ்வர பண்டாரவை மேலும் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவர் நேற்றுக் காலை கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.



இரண்டு அரச நிறுவனங்களில் ஒரே நேரத்தில் வேதனம் பெற்ற குற்றச்சாட்டின் பெயரில், குற்றப் புலனாய்வு பிரிவினரால் கடந்த 18 ஆம் திகதி அவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் வடக்கு பிரதேச சபை : காங்கேசன்துறை உப அலுவலகம்**

| | |
|---|---|
| உரிமையாளர் பெயர் | : விஜயஜீவன் சுசன்திகா |
| விண்ணப்பதாரர் பெயர் | : விஜயஜீவன் சுசன்திகா |
| முகவரி | : புளியடி வீதி, காங்கேசன்துறை |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் காங்கேசன்துறை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 03, காங்கேசன்துறை வீதி ஆதன இல. 1595/17 இல் அமைந்துள்ள தெல்லிப்பளை கோவிற்பற்று, பழை இறை "ஆடியன்வளவு" என்ற ஆதனம் உரிமை கோருபவர் சொந்தக்காரர் R.ஜீவன் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது. குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு கமலச்சந்திரன் கீர்த்தனா முகதாவில் 18.01.2020 ஆம் திகதியில் 1172 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் பழை இறை "ஆடியன்வளவு" நிலப்பரப்பு இரண்டு, குளி ஒன்பது தசம் ஏழு ஐந்து (நில.பர. 2 குளி 9.75) விஸ்தீரணம் உள்ள ஆதனம் விண்ணப்பதாரரான விஜயஜீவன் சுசன்திகாவுக்கு சொந்தமாகியது. 1172 ஆம் இலக்க உறுதியின் தாய்உறுதியாக பிரசித்த நொத்தாரிசு அ.குமரகுரு முகதாவில் 1989.07.15 ஆம் திகதி 6501 ஆம் இலக்க சீதன உறுதி குறிப்பிடப்பட்டுள்ளது. 6501 ஆம் இலக்க உறுதியின் ஆதன அட்டவணையில் நிலப்பரப்பு ஒன்றே முக்கால் (1 3/4) இதில் சொரியலாய் ஆறிலைந்து பங்கு 5/6 அளவுடைய ஆதனமே செல்வமாணிக்கம் மகள் தனலட்சுமி என்பவரால் மகளாகிய கந்தசாமி விஜயஜீவன் குமுதினிக்கு சீதனமாக வந்தடைந்துள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பிரதேசசபை, தெல்லிப்பளை கோவிற்பற்று பழை இறை, வலிகாமம் வடக்கு பிரதேசசபை பிரிவிற்கு உட்பட்டதும் தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவிற்குள் அமைந்துள்ளதும் கிராமசேவையாளர் பிரிவு J/233 இல் அமைந்துள்ளதும் ஆடியன் வளவு நிலப்பரப்பு 1 3/4 உம் பனைகளும் கிணறும். இதில் சொரியலாய் 5/6, எனினும் இது நெடுங்கால ஆட்சிப்படி நிலப்பரப்பு 1 3/4, எனினும் இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எம். சண்முகநாதன் அவர்களால் 2017.01.16 ஆம் திகதி அளந்து வரைந்த 2097 ஆம் இலக்கப்படத்தில் துண்டு 01,02,03 எனச் சுட்டிய நிலப்பரப்பு 2 குளி 9.75 உம் வீடும் அதனைச் சேர்ந்தவைகளும்.

இதற்கு எல்லைகள்

**கிழக்கு** :- இரத்தினம் பெண் நாகம்மாவின் ஆதனம்
**வடக்கு** :- தம்பையா சின்னத்துரையின் ஆதனம்
**மேற்கு** :- இரத்தினசிங்கம் பெண் திரவியத்தின் ஆதனம்.
**தெற்கு** :- சொக்கலிங்கம் பெண் செல்வமணியின் ஆதனம்
இவ்வெல்லைப்படி இது முழுவதும் இதற்குரியவைகளும்


தற்போது இவ்வாதனத்தை விஜயஜீவன் சுசன்திகா என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தை உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விஜயஜீவன் சுசன்திகா எனும் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்குபிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சோமசுந்தரம் சுகிர்தன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).** (7956)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வவுனியா மாதர்பணிக்க மகிழங்குளத்தில் தொடரும் சட்டவிரோத காடழிப்பு

## தடுத்து நிறுத்துமாறு ஐங்கரநேசன் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வவுனியா மாதர்பணிக்க மகிழங்குளத்தில் தொடரும் சட்டவிரோத காடழிப்பை தடுத்து நிறுத்துமாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா ஓமந்தை - பாலமோட்டை வீதியில் அமைந்துள்ள மாதர்பணிக்க மகிழங்குளம் பகுதியில் இதுவரையில் 80 ஏக்கர்களுக்கும் அதிகமான பரப்பளவைக் கொண்ட அடர்ந்த காடு தனிநபர் ஒருவரால் சட்டவிரோதமான முறையில் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளது.

அரச காணிகளைக் கூறு போட்டு விற்கும் நோக்கில் இடம்பெறும் இந்த வனக் கொள்ளைக்கு வனவளத் திணைக்கள அதிகாரிகளும் துணை போகின்றனர்.

இது வெறுமனே மரங்களின் அழிவுகள் மட்டுமல்ல. வுனியாவின் குடிநீர் ஆதாரம் மற்றும் யானைகளின் வாழ்விடத்தைச் சிதைக்கும் கொடூரமும் ஆகும்.

வவுனியாவில் காடுகள் அழிக்கப்படுவதால் அண்மைக் காலமாக வவுனியா - ஹொரவபொத்தானை வீதி மற்றும் ஓமந்தைப் பகுதிகளில் மனித - யானை மோதல்கள் பன்மடங்கு அதிகரித்துள்ளன. காடுகளை இழந்து உணவுக்கும் நீருக்கும் தவிக்கும் காட்டு யானைகள் கிராமங்களுக்குள் புகுந்து மக்களின் பயிர்களைச் சேதப்படுத்துவதோடு உயிர்களையும் பலியெடுத்து வருகின்றன. இப்போது இந்த 80 ஏக்கர்களையும் தாண்டி நிகழும் காடழிப்பு அந்தப் பகுதி மக்களின் உயிருக்கும் பயிர்ச் செய்கைக்கும் மென்மேலும் ஆபத்தை விளைவிப்பதாகவே அமைந்துள்ளது.

எனவே சுற்றுச்சூழல் திருத்தச் சட்டத்தின் விதிகளுக்கு அமைய காடழிப்பை மேற்கொண்டு வருபவர்கள் மீது உடனடியாகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (8)





அமரர் தவமணிதேவி சதாசிவம் ஞாபகார்த்த நிழற்குடை நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயம் அருகாமையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.ஏ.சுமந்திரனால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. (படம்:மகாலிங்கம்)

## வடமாகாண பொதுச்சேவையிலுள்ள பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவையின் நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்றன் - தரம் III, இல்லத்தாய் - தரம் III, உதவி மேற்றன்- தரம் III, உதவி விடுதிக் காப்பாளர் - தரம் III, உதவி இல்ல ஆசிரியர் - தரம் III, உதவி இல்ல ஆசிரியை - தரம் III, தொழில் பயிற்சி போதனாசிரியர் - தரம் III மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேலதிக தகவல்களை www. np.gov.lk எனும் இணையத் தளத்தில் பார்வையிட முடியும். விண்ணப்பங்களை 03.07.2026 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு ஆணையாளர் சுஜீவா சிவதாஸ் கேட்டுள்ளார். (8)

## கிளிநொச்சி ஏ9 வீதியில்

# கனரக வாகனங்களுக்கு போக்குவரத்து கட்டுப்பாடு



(தருமபுரம்)

கிளிநொச்சி ஏ9 வீதி இரணைமடு சந்தி தொடக்கம் பரந்தன் சந்தி வரையான பகுதியில் டிப்பர் வாகனம் உட்பட கனரக வாகனங்களின் போக்குவரத்துக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் தலைமையில் வீதி விபத்துக்களை தடுத்தல் மற்றும் எதிர்கால சந்ததியினரை நல்வழிப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடலின் போதே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் காலை ஏழு மணி தொடக்கம் எட்டு மணிவரைக்கும் பிற்பகல் ஒரு மணிதொடக்கம் இரண்டு மணி வரைக்கும் இரணைமடு சந்தி மற்றும் பரந்தன் சந்திக்கு இடைப்பட்ட பகுதியில் ஏ9 வீதியில் டிப்பர் வாகனம் உட்பட கனரக வாகனங்கள் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளது. பாடசாலைகள் ஆரம்பித்து நிறைவுறும் நேரத்தை கருத்தில் எடுத்து இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், கரைச்சி பிரதேச செயலாளர், கல்வித் துறைசார் அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், போக்குவரத்து துறைசார் பிரதிநிதிகள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட செயலகத்தின் துறைசார் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (8-316)

# 'சிசுசெரிய' பேருந்து சேவை யாழில் நேற்று ஆரம்பம்

(சாவகச்சேரி)

டிஜிற்றல் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய 'சிசு செரிய' பாடசாலைப் பேருந்துச் சேவை நேற்று யாழ்ப்பாணம் கொடிகாமம் மத்திய பேருந்து நிலையத்தில் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.




வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில், கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் ஆகியோர் கலந்து கொண்டு சேவையை ஆரம்பித்து வைத்தனர்.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் போக்குவரத்தை எளிதாக்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 'சிசு செரிய' திட்டத்தின் கீழ், மாணவர்களிடமிருந்து அரை வாசிக் கட்டணம் மட்டுமே அறவிடப்படுவதுடன், மீதித் தொகையை அரசாங்கம் மானியமாக வழங்குகிறது. தனியார் பேருந்து உரிமையாளர்களின் ஒத்துழைப்புடன் உசனிலிருந்து யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறை நோக்கி இரண்டு புதிய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இச்சேவையின் முக்கிய அம்சமாக, மாணவர்களுக்கு வழங்கப்படும் டிஜிற்றல் அட்டைகள் மூலம் அவர்கள் பேருந்தில் ஏறும் மற்றும் இறங்கும் நேரங்கள் உடனுக்குடன் பெற்றோரின் கைப்பேசிகளுக்கு குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். இதன் மூலம் மாணவர்களின் பயணப் பாதுகாப்பு மேலும் வலுப்படுத்தப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச செயலாளர், வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர், பொது முகாமையாளர், வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் பிராந்திய பஸ் கம்பனிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (8-30)

## பேருந்து சாரதிகள், நடத்துநர்களுக்கு

# புதிய சீருடை அறிமுகம்

(தருமபுரம்)

வட மாகாணத்தில் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கான சீருடை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க கிளிநொச்சியிலுள்ள வட மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு நேற்று விஜயம் செய்தார்.

இதன் போது வட மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் செயற்பாடுகளை பார்வையிட்டதுடன் உத்தியோகத்தர்களுடனும் அமைச்சர் கலந்துரையாடியிருந்தார்.

தொடர்ந்து வடமாகாணத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கான சீருடை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் தனியார் பேருந்து உரிமையாளர் சங்க பிரதிநிதிகள், சாரதிகள், நடத்துநர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## யாழ்ப்பாண உயர் கற்கைகள் நிறுவனம்
## உயர் கல்விச் சபை
(Registered No P/V 122998 Established in 2017)

### முன்பள்ளி ஆசிரியர் தகைமை நெறி 2026

**உங்களை தயார்படுத்தி அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்க நாங்கள் தயார்.**
**விண்ணப்ப முடிவு - 08.07.2026**
**ஆரம்பம் - 11.07.2026 (சனிக்கிழமை) மு.ப.8.30**

- வள ஆளணியினர்,

| | | |
|---|---|---|
| 01 | பேராசிரியர் கலாநிதி N.ஞானதேவன் | ஓய்வு நிலை பேராசிரியர், அண்ணாமலை பல்கலைக்கழகம், தமிழ்நாடு. |
| 02 | பேராசிரியர் சுரேஷ் | ஓய்வு நிலை பேராசிரியர், அண்ணாமலை பல்கலைக்கழகம், தமிழ்நாடு. |
| 03 | பேராசிரியர் மா.சின்னத்தம்பி | ஓய்வு நிலை பேராசிரியர், யாழ் பல்கலைக்கழகம். |
| 04 | பேராசிரியர் கலாநிதி ஜெ.இராசநாயகம் | யாழ் பல்கலைக்கழகம். |
| 05 | பேராசிரியர் ஆ.நித்திலவர்னன் | தலைவர், கல்வியியல் துறை, யாழ் பல்கலைக்கழகம். |
| 06 | திரு. R.சர்வேஸ்வரா | சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம். |

- விரிவுரைகள், கலந்துரையாடல், பின்னூட்டல் செயற்பாடுகள் நிறைவு செய்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். (Acredited by TVEC, Srilanka)
- **விண்ணப்பிக்கும் முறை :**

I. விண்ணப்பப்படிவத்தை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
II. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் 08.07.2026 இற்கு முன் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

தொடர்பு :-Mr.P.Balamuhunthan, Programme Director
- 077 386 7458/ 021 221 6933
முகவரி :- சிமாட் கிட்ஸ்,(சிவகாமி மஹால் திருமண மண்டபம் அருகில்) ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(7953)


# இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு 450 மில்லியன் டொலர் நிதி

(கொழும்பு)

இலங்கையைத் தாக்கிய "டித்வா" புயல் அனர்த்தத்தினால் ஏற்பட்ட 3.5 பில்லியன் டொலர் சேதங்களை மீளக்கட்டியெழுப்புவதற்காக, இந்திய அரசாங்கத்திடமிருந்து 450 மில்லியன் டொலர் நிதியுதவியைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தியாவின் "சாகர்பந்து நடவடிக்கையின்" கீழ் முன்மொழியப்பட்டுள்ள இந்த நிதியில், 350 மில்லியன் டொலர் கடனாகவும் மற்றும் 100 மில்லியன் டொலர் நன்கொடையாகவும் வழங்கப்படவுள்ளது.

இத் தொகையானது உட்கட்டமைப்பு, தொடர்பாடல், சுகாதாரம், கல்வி, வீடமைப்பு மற்றும் நீர் வழங்கல் போன்ற அத்தியாவசியத் துறைகளின் புனரமைப்புக்காகப் பயன்படுத்தப்படவுள்ள நிலையில், இதற்கான இருதரப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை இவ்வாறு அனுமதி அளித்துள்ளது. (நி)

# உணவுத் தட்டுப்பாடு இலங்கையில் ஏற்படாது

## விவசாய அமைச்சர் உறுதி



(கொழும்பு)

"நாட்டில் உணவு தட்டுப்பாடு இல்லை. உணவுப் பாதுகாப்பு என்பது சிறந்த மட்டத்தில் உள்ளது. எனவே, உணவு பற்றாக்குறை குறித்து மக்கள் வீண் அச்சம் கொள்ள வேண்டியதில்லை" என்று விவசாய அமைச்சர் லால் காந்த தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எல் நினோ காலநிலை பற்றி பேசி, அச்சமூட்டுகின்றனர். நாம் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றோம். எனவே, பாரிய தாக்கம் எதுவும் எமக்கு இல்லை. எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, வெளிநாட்டில் இருந்து தற்போது இலங்கைக்கு டின்மீன் இறக்குமதி செய்யப்படுவதில்லை. இப்படி பல நல்ல விடயங்கள் நடந்தாலும், எதிர்மறையான விடயங்களைப் பற்றியே சமூகத்தில் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி)

# ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் வடக்கு பிரதேசசபை :- தெல்லிப்பளை உப அலுவலகம்**
**உரிமையாளர் பெயர் :- சிவதாசன் பெண் யசோதாமலர்**
**விண்ணப்பதாரர் பெயர் :- சிவதாசன் பெண் யசோதாமலர்**
**முகவரி :- செந்தாவத்தை மாவிட்டபுரம் தெற்கு தெல்லிப்பளை.**

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 11, V.C ஒழுங்கை, இலக்கம் 55/3 இல் இவ்வாதனம் அமைந்துள்ளது. குறித்த ஆதனமானது 2024.07.27 ஆந்திகதிய பிரசித்த நொத்தாரிஸ் செல்வி. கிருஸ்ணவேணி சந்திரலிங்கம் அவர்கள் முகதாவில் இலக்கம் 6307 இல் அத்தாட்சிப்படுத்திய அறுதி மூலம் விண்ணப்பதாரியை வந்தடைந்தது.

மேலும் குறித்த ஆதனத்தில் தனது ஆட்சியிலுள்ள பாகமான ஆதனம் தொடர்பில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.புஸ்பராஜா அவர்களால் அளந்து வரைந்த 8301 இலக்க 2022.06.16 திகதிய நில அளவைப்படத்தில் துண்டு - 1 என காட்டப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி, தெல்லிப்பளை கோவிப்பற்று, தெல்லிப்பளை மேற்கு இறை "சூனாவத்தைத் தோட்டம்" நிலப்பரப்பு 7 இதற்கு எல்லைகள்


**கிழக்கு** :- தில்லையம்பலம் செல்வரத்தினத்தின் ஆதனமும் சீனிப்பிள்ளை ரங்கனின் ஆதனமும் வழிவாய்க்காலும்
**வடக்கு** :- வழிவாய்க்கால்
**மேற்கு** :- யோகநாதன் காண்டீபனினதும் சீராளன் சின்னப்புவினதும் ஆதனம்
**தெற்கு** :- ஒழுங்கை

மேற்குறித்த ஆதனத்தை சிவதாசன் பெண் யசோதாமலர் என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் மேற்படி பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.சோமசுந்தரம் சுகிர்தன், தவிசாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(7952)


# சேவை நலன் பாராட்டும், வாழ்த்துக்களும்




திருமதி.
## குமுதினி அசோக்குமார்
(SLPS-I, B.Ed, Sci.Trd)

அவர்கள் 38 வருட காலமாக அளப்பரிய கல்விச் சேவையாற்றி 02.07.2026 இன்று ஓய்வு பெறும் எமது அதிபர் தனது ஓய்வு காலத்தில் மகிழ்வோடு, எல்லா நலன்களும், வளங்களும் பெற்று இறையருளோடு நீடூழி வாழ்கவென அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

ஆசிரியராக
- யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி 17.08.1988 – 01.05.1991
- யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி 02.05.1991–31.12.1992
- யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி 01.01.1993–02.01.1997
- யா/கோப்பாய் மகா வித்தியாலயம் 03.01.1997–04.01.2004
- யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி 05.01.2004–08.01.2006
- யா/கோப்பாய் மகா வித்தியாலயம் 09.01.2006 – 14.06.2009

அதிபராக
- யா/கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை 15.06.2009 – 02.07.2026

(7958)


வாழ்த்துவோர்– முன்னாள், இன்னாள் ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள் யா/கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# பாரதம்

## பாகிஸ்தானில் பயங்கரம்

# கூரை இடிந்து வீழ்ந்ததில் 14 சிறுவர்கள் உயிரிழப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் லாகூர் நகருக்கு அருகிலுள்ள தனியார் மேலதிக வகுப்பு கல்வி மையம் ஒன்றின் கூரை இடிந்து வீழ்ந்ததில், அங்கு கல்வி கற்றுக்கொண்டிருந்த 14 சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் லாகூரின் புறநகர்ப் பகுதியான கஹ்னாவில் இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இடிபாடுகளுக்குள் இருந்து மீட்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் 7 முதல் 11 வயதிற்கு இடைப்பட்ட சிறுவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து குறித்து தகவல் கிடைத்த ஒரு மணி நேரத்திற்குள் மீட்புப் பணிகள் நிறைவடைந்ததாக மீட்புக் குழுவின் ஊடகப் பேச்சாளர் பருக் அகமது தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் 5 சிறுவர்கள் காயமடைந்துள்ளனர்.

சிறுவர்கள் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த போது, குறித்த பழமையான கட்டிடத்தின் கூரையில் ஓடுகளைப் பழுது பார்க்கும் பணிகள் நடந்து கொண்டிருந்ததாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது கூரையின் மீது அதிக எடை வைக்கப்பட்டதே, அது திடீரென இடிந்து வீழ்வதற்கு முதன்மைக்காரணம் எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் இருவர் பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளனர். (3)

# ஹிஸ்புல்லா அச்சுறுத்தல்

# லெபனானில் இஸ்ரேல் இரா

# நெதன்யாகு அதிர

(ஜெருசலேம்)

**லெபனானில் ஹிஸ்புல்லா அச்சுறுத்தல் இருக்கும் வரை இஸ்ரேல் இராணுவமும் அங்கேயே இருக்கும் என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு அறிவித்துள்ளார்.**

இஸ்ரேலிய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள லெபனான் பகுதிக்கு இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அங்குள்ள வீரர்களிடம் உரையாற்றிய அவர், ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்பின் அச்சுறுத்தல் நீடிக்கும் வரை இஸ்ரேல் இராணுவம் லெபனானின் தெற்குப் பகுதியில் இருந்து பின்வாங்காது என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் மத்தியஸ்தத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இஸ்ரேல் மற்றும் லெபனான் அரசாங்கங்களுக்கு இடையே எட்டப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தத்திற்குப் பிறகு, நெதன்யாகு ஆக்கிரமிக்கப்பட்ட லெபனான் பகுதிக்குச் செல்வது இதுவே முதல் முறையாகும்.

இந்த நிலையில், "அச்சுறுத்தல் நீங்கும் வரை நாங்கள் தெற்கு லைபனானை விட்டு வெளியேற மாட்டோம் என்பதில் உறுதியாக இருக்கிறோம்" என்று நெதன்யாகு

## தினந்தோறும் 10 சவரன் தங்கத்தை

# காற்றில் கக்கும் எரிமலை




அந்தார்டிக்காவில் அமைந்துள்ள மவுண்ட் எரேபஸ் எரிமலை, நாள்தோறும் சுமார் 10 சவரன் தங்கத்தைக் காற்றில் வெளியேற்றி வருவதாகப் புதிய ஆய்வொன்றில் கண்டறியப் பட்டுள்ளது.

இந்த எரிமலையிலிருந்து வெளியேற்றப்படும் தங்கத்தின் மதிப்பு ஆண்டிற்குச் சராசரியாக 18.9 கோடி ரூபாயாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.


அத்துடன் காற்றில் கலக்கும் இந்தத் தங்கத் துகள்கள் எரிமலையிலிருந்து சுமார் 1,000 கிலோமீற்றர் தூரம் வரை பரவி, அந்தார்டிக்கா வின் பனிப் பாறைகளில் படிந்து வருவதாகவும் குறித்த புதிய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## வெனிசுலா நிலநடுக்கம்

# 6 நாட்களுக்கு பிறகு உயிருடன் மீட்கப்பட்ட 3 வயதுச் சிறுவன்

(காரகஸ்)

வெனிசுலாவில் நிலநடுக்கத்தால் இடிந்து விழுந்த கட்டிடத்தின் இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த 3 வயது சிறுவன், 6 நாட்களுக்குப் பிறகு உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாக ஜோர்டானிய மீட்புக்குழு தெரிவித்துள்ளது. லா குவைரா மாநிலத்தில் உள்ள லாஸ் கோரல்ஸ் கார்டன் கட்டிடத்திலிருந்து ஜோர்டானைச் சேர்ந்த மீட்புக் குழுவினரால் மோரன் மீட்கப்பட்டார் என்று வெனிசுலாவின் தற்காலிக ஜனாதிபதி டெல்சி ரோட்ரிக்ஸ் தெரிவித்துள்ளார்.



அச்சிறுவனுக்கு முதலுதவி அளிக்கப்பட்டு, காரகஸ் நகரில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த வெனிசுலா அதிகாரிகள், தற்போது சிறுவனின் ஆரோக்கிய நிலைமை சீராக உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த நிலநடுக்கங்களால் கிட்டத்தட்ட 59 ஆயிரம் கட்டடங்கள் சேதமடைந்துள்ளதாகவும் நாசா அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ் இருக்கும் வரை
# ாணுவமும் இருக்கும்
## ரடி



இராணுவ வீரர்களிடம் கூறியதாக அவரது அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், "ஹிஸ்புல்லா ஆயுதங்களுடனும் எங்களுக்கு அச்சுறுத்தலாகவும் இங்கு இருக்கும் வரை, நாங்களும் இங்கேயே இருப்போம்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு ஆக்கிரமிக்கப்பட்ட லெபனான் பகுதிக்கு முதன் முறையாக பகிரங்கமாக விஜயம் செய்துள்ள நெதன்யாகுவுடன், பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் மற்றும் மூத்த இராணுவ அதிகாரிகளும் உடன் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

# தென்கொரியாவின் புதிய பிரதமராக ஹான் சியோங் - சுக் நியமனம்



(சியோல்)

தென் கொரியாவின் புதிய பிரதமராக ஹான் சியோங்-சுக்கை நியமனம் செய்ய அந்த நாட்டு பாராளுமன்றம் அங்கீகரித்துள்ளது. ஹான் சியோங்-சுக், தென் கொரியாவின் முன்னணி இணைய நிறுவனமான "நேவர்" நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரியாவார். அவர் ஜனாதிபதி லீ ஜேமியுங் தலைமையிலான அரசாங்கத்தில், சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான அமைச்சராகப் பணியாற்றி வந்தார்.

இந்த நியமனத்தின் மூலம், தென் கொரியாவின் வரலாற்றில் இந்தப் பதவியை ஏற்கும் இரண்டாவது பெண்மணி என்ற பெருமையை அவர் பெறுகிறார்.


இந்த நிலையில், அவர், ஜனாதிபதி லீ ஜே மியுங்கின் நிர்வாகத்தில், தொழில்நுட்பத்துறையில் தனக்கு உள்ள அனுபவத்தைக் கொண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (3)

## தீவிரமடையும் கடும் வெப்ப அலை

# அமெரிக்கா, கனடா மக்களுக்கு எச்சரிக்கை

(வோஷிங்டன்)

அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இந்த வாரம் கடுமையான மற்றும் அபாயகரமான வெப்ப அலை தீவிரமடையக் கூடும் என்று வானிலை முன்னறிவிப்பாளர்கள் எச்சரித்துள்ளனர்.



அமெரிக்காவில் ஜூலை 4 ஆம் திகதி சுதந்திர தின வார இறுதி விடுமுறையை மக்கள் எதிர்நோக்கியுள்ள நிலையில், நாடு முழுவதும் சுமார் 120 மில்லியன் மக்கள் தீவிர வெப்ப எச்சரிக்கையின் கீழ் வைக்கப்பட்டுள்ளதாக தேசிய வானிலை சேவை தெரிவித்துள்ளது.

35 பாகை செல்சியஸ் முதல் 40.6 பாகை செல்சியஸ் வரை பதிவாகக்கூடிய இந்த வெப்பநிலையானது, அதிக ஈரப்பதத்துடன் இணைந்து 38 பாகை செல்சியஸ் முதல் 46 பாகை செல்சியஸ் வரையிலான வெப்பத் தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபுறம், கனடாவின் ஒன்ராறியோ மற்றும் மொன்றியால் உள்ளிட்ட பகுதிகளிலும் வெப்ப அலை ஆரம்பமாகியுள்ளதுடன், அங்கு வெப்பநிலை 37 பாகை செல்சியஸ் வரை உயரக்கூடும் என்பதால் ஆரஞ்சு மற்றும் மஞ்சள் நிற எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. (3)

# காணாமல் போய் 35 ஆண்டுகளுக்கு பிறகு குடும்பத்துடன் இணைந்த மாற்றுத்திறனாளி

## சீனாவில் நெகிழ்ச்சிச் சம்பவம்

(பீஜிங்)

சீனாவில் 35 வருடங்களுக்கு முன்பு தொலைந்த மாற்றுத்திறனாளி வாலிபர், டி.என்.ஏ (DNA) பரிசோதனை மூலம் குடும்பத்துடன் இணைந்தார்.

சீனாவின் ஹெநான் மாகாணத்தைச் சேர்ந்த சிறுவன் லீ ஷெக்கிங் (வயது 4). இந்த சிறுவன் வாய் பேசவும், காது கேட்கவும் முடியாத மாற்றுத்திறனாளி. லீ ஷெக்கிங் கடந்த 1991 ஆம் ஆண்டு தனது நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது விளையாட்டாக அங்கு நின்று கொண்டிருந்த ஒரு ரயிலில் ஏறியுள்ளான்.

ரயிலின் உள்ளே சென்று ஒரு இருக்கைக்கு அடியில் ஒழிந்து கொண்டு படுத்த சிறுவன் அங்கேயே அயர்ந்து தூங்கிவிட்டான். பின்னர் அந்த சிறுவன் கண்விழித்துப் பார்த்த போது வேறு புதிய இடத்திற்குச் சென்றிருந்தான்.

லீ வாய் பேசவும், காது கேட்கவும் முடியாத மாற்றுத்திறனாளி என்பதால், அவனால் தனது ஊர் மற்றும் பெற்றோர் விபரங்களை யாரிடமும் கூற முடியவில்லை. இதனைத் தொடர்ந்து ஷென்சென் நகருக்குச் சென்ற அவனை, அங்குள்ள ஒரு உணவக உரிமையாளர் தத்தெடுத்து வளர்த்துள்ளார் .

லீ ஷெக்கிங்கிற்கு சிறுவயதிலிருந்தே தனது பெயரை தலைகீழாக எழுதும் ஒரு தனித்துவமான பழக்கம் இருந்தது. 35 ஆண்டுகள் கழித்து, தனது குடும்பத்தைத் தேடும் முயற்சியாக இணையத்தில் ஒரு தகவலைப் பகிர்ந்திருந்தார். அதே நேரத்தில் அவரது குடும்பத்தினரும் அவரை பல வருடங்களாகத் தேடி வந்தனர்.

இணையத்தில் லீ பதிவிட்ட செய்தியையும், அவர் பெயரைத் தலைகீழாக எழுதியிருந்த விசித்திரமான பழக்கத்தையும் அவரது சகோதரர் தற்செயலாகக் கவனித்து, அது தனது தம்பி தான் என்பதை அடையாளம் கண்டு கொண்டார்.

உடனடியாக பொலிஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, அதிகாரபூர்வமாக டிஎன்ஏ பரிசோதனை செய்யப்பட்டது. அதில் அவர் லீ ஷெக்கிங் என்பது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து ஜூன் 11 அன்று ஷென்சென் நகரில், தனது தந்தை, சகோதரர் மற்றும் சகோதரியை லீ நேரில் சந்தித்தார்.

காணாமல் போய் 35 வருடங்களுக்குப் பிறகு மகன் நேரில் வந்ததைக் கண்டு அவரது தந்தை கண்ணீர் விட்டு அழுத காட்சி அங்கிருந்தவர்களை நெகிழச் செய்தது. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தெற்கு ஸ்ரீ பத்திநாச்சி அம்பாள் ஆலய மகா. கும்பாபிஷேக பெரும் சாந்தி விழா எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.55 மணி தொடக்கம் 10.25 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறும்.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எண்ணெய்க்காப்பு, பால்காப்பு சாத்தும் நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மறுநாள் சனிக்கிழமை நண்பகல் 12 மணி வரை நடைபெறும். (8-33)

# யாழ்.ஆயர் இல்லத்திற்கு வருகை தந்தார் புதிய ஆயர்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் புதிய ஆயர் அன்ரன் ரஞ்சித்பிள்ளை நாயகம் நேற்றைய தினம் யாழ்.மறை மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டார்.

யாழ்.மறைமாவட்ட ஆயர் இல்லத்திற்கு வருகை தந்த புதிய ஆயரை குருமுதல்வர் அருட்தந்தை ஜோசப் தாஸ் ஜெபரட்ணம் மற்றும் மறை மாவட்ட குருக்கள் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து, ஆயர் இல்ல கேட்போர் கூடத்தில் நடைபெற்ற யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் குருக்களுடனான விசேட கலந்துரையாடலிலும் புதிய ஆயர் பேரருட்தந்தை அன்ரன் ரஞ்சித்பிள்ளை நாயகம் கலந்து கொண்டார். (8-33)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1999- இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>1இல்செவ்<br>கி-பா-0<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: O/L ,Police<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/17015 | பிறப்பு-1999-இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>12இல் செவ்<br>கி-பா-11<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Bsc,QA Engineer<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/17035 |
| பிறப்பு:1986-இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்- Diploma Coures, Teachnician<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/17016 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்;விசாகம்<br>கி-பா-15 1/4<br>2இல்செவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSC,MSC,Assistant Lecturer<br>எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்<br>தொ.இ: G/17038 |
| பிறப்பு:1995-இந்து<br>நட்சத்திரம்:மகம்<br>1இல்செவ்<br>கி-பா-77<br>உயரம்:5'11"<br>தகைமை/தொழில்:BSC,Master,Dental Surgeon(UK)<br>எதிர்பார்ப்பு:படித்த பெண்<br>தொ.இ: B/17017 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>2இல்செவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L,Teacher(pre school)<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/17039 |
| பிறப்பு: 1989- இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்-A/L,Driver(own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/17018 | பிறப்பு-1991-இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>7இல்சூரிசெவ்<br>கி-பா -29 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்-BBA,MA<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/17041 |
| பிறப்பு: 1990- இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம்:5'6"<br>கி-பா-28<br>தகைமை/தொழில்: Salesman<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/17019 | பிறப்பு-1988 - இந்து<br>நட்சத்திரம்-பூராடம்<br>கி-பா-29<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் : BSC, MSC, Reseacher<br>எதிர்பார்ப்பு - உத்தியோகம்<br>தொ.இ: G/17043 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டுமே


# இன்று ஒரு தகவல் 606



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## அது எங்கே இருக்கிறது?

ஒரு கடற்கரை ஓரம்.

அங்கே ஒரு சின்ன கிராமம். அந்த கிராமத்தில் ஒரு சின்னப்பள்ளிக்கூடம். கடற்கரை ஓரத்தில் உள்ள ஒரு விடுதியில் ஓய்வுக்காக ஒருத்தர் வந்து தங்கியிருந்தார்.

பள்ளிக்கூடத்தில் ஏதோ விழா நடப்பது போல தெரிந்தது. உடனே அவர் அந்தப் பக்கமாக வந்தார். இங்கே என்ன நடக்கிறது? என்று விசாரித்தார்.

பள்ளி ஆண்டு விழா நடக்கிறது என்றார்கள்.

உள்ளே போனார். கண்காட்சி ஒன்று வைத்திருந்தார்கள். பள்ளிக்கூடத்தில் படிக்கிற மாணவர்களே சொந்தமாக தயார் செய்த பொருட்களைக் காட்சிக்கு வைத்திருந்தார்கள்.

அந்த ஊர்மக்கள் எல்லாம் அதைக் கூட்டம் கூட்டமாக போய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இவரும் ஆர்வமாக அதையெல்லாம் பார்த்துக் கொண்டே போனார். ஒரு இடத்தில் ஒரு சின்ன ரயில் செய்து வைத்திருந்தார்கள். மாணவர்களே தயார் செய்தது!

அது ஓடக்கூடிய மாதிரி மின்சாரத்தால் செய்திருந்தார்கள். அதில் ஒரு சின்னப் பொத்தான் இருக்கும். அதை அமுக்கினால் ரயில் ஓடும். சுற்றிச் சுற்றி வரும்.

மாணவர்கள் எதிரில் நினறு விளக்கம் கொடுத்துக் கொண்டு இருந்தார்கள்.

இவர் அதைக் கவனித்தார். ரயில் ஓடுவதைப் பார்த்தார். அங்கே நின்று கொண்டிருந்த மாணவர்களிடம் விளையாட்டாகக் கேட்டார். இந்த ரயில் எதனால் ஓடுகிறது?" என்று கேட்டார்.

"சக்தியினாலே் ஓடுகிறது!" என்றார்கள் மாணவர்கள்.

"அது என்ன சக்தி?" என்றார்.

அதற்குப் பேர் "மின்சாரம்" என்றார்கள்.

"நீங்கள் மின்சாரத்தைப் பார்த்திருக்கின்றீர்களா?" என்றார்.

"நாங்கள் பார்த்ததில்லை ஆனால் இதை செய்வதற்கு எங்களுக்கு உதவி செய்த ஆசிரியர் ஒரு பட்டதாரி. ஒருவேளை அவர் பார்த்திருக்கலாம்!" என்றார்கள்.

"அவர் எங்கே இருக்கார்?" என்றார்.

"இதோ அழைத்துக் கொண்டு வருகிறோம்" என்று சொல்லிவிட்டு ஓடிப்போய் அழைத்துக் கொண்டு வந்தார்கள். அவரிடம் கேட்டார்.

"மின்சாரத்தைப் பார்த்திருக்கின்றீர்களா?" என்று.

"மின்சாரத்தைப் பார்க்கிறதாவது? நான் பார்த்ததே இல்லை!

நான் பார்த்தது அது செயல்படும் விதத்தை தான்! அது விளக்கை எரியச் செய்கிறது. ரயிலை ஓடும்படி செய்கிறது.

இதே மாதிரி எத்தனையோ இயந்திரங்களைச் செயல்பட வைக்கிறது. ஆனால் உண்மையிலேயே அது என்னவென்று எனக்குத் தெரியாது.

ஒரு வேளை இந்தப் பள்ளிக்கூடத்துத் தலைமை ஆசிரியருக்குத் தெரிந்திருக்கலாம். ஏன் என்றால் அவர் ஒரு மேல் நிலைப்பட்டதாரி!" என்றார் அவர்.

சரி என்று போய் தலைமை ஆசிரியரைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். அவரிடம் கேட்டார் இதே கேள்வியை! இதற்கு அவர்

"மன்னிக்கணும் இந்தக் கேள்வியை இது வரைக்கும் யாரும் கேட்டதில்லை. சக்தியை யாரும் பார்க்க முடியாது. ஆனால் அது செயற்படும் விதத்தைத்தான் பார்க்க முடியும்" என்றார். இப்போது இது வரைக்கும் கேட்டுக் கொண்டிருந்தவர் சிரித்தார். சிரித்துவிட்டுச் சொன்னார்.

சரி, அதற்காக ஒன்றும் கவலைப்படாதீர்கள். என்னுடைய பெயர் "தோமஸ் அல்வா எடிசன்" என்றார் இதைக் கேட்டதும் அங்கே இருந்தவர்களுக்கு எல்லாம். அதிர்ச்சி! ஆச்சரியம்.

"என்னது? நீங்கள் தானா எடிசன்? நீங்கள் எவ்வளவு மின்சாரக்கருவிகளை உண்டாக்கியிருக்கிறீர்கள். நீங்களா இந்தக் கேள்வியை கேட்பது?" என்றார்கள்.

"ஆமாம், நான் தான் கேட்கிறேன். ஏனென்றால் நானே மின்சாரத்தைப் பார்த்தது கிடையாது!" என்றார் அவர்.

அன்பு என்பது இப்படிப்பட்டது தான் என்கிறார் "ஓஷோ" அன்பு என்பது நம் உடற்கூறு அமைப்பில் இல்லை.

அது நம் உடம்பில் உள்ள சுத்த சக்தியின் வெளிப்பாடு. அதை உணரத்தான் முடியும். பார்க்க முடியாது!

"அன்பே! உன்னை என் இதயத்திலே வைத்திருக்கிறேன்!" என்பான்.

இது வைத்தியர் சொல்கிற இதயம் இல்லை. அது இரத்தத்தைத் தள்ளுகிற ஒரு கருவி அவ்வளவுதான். ஞானிகள் சொல்லும் இதயம் வேறு அது கண்ணுக்குப் புலப்படாத ஒரு சக்தி!

"என்னுடைய இதயம் மிகவும் விசாலமானது சேர்" என்றார் ஒருத்தர்.

"அப்படியா?" என்றேன் மிகவும மரியாதையாக!

"ஆமாம் வைத்தியர் அப்படித்தான் சொல்கிறார். கொஞ்சம் வீங்கிப் [illegible] இருக்கிறதாம்!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தரிசனம் 02 XXXIII

## இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும்

புருசோத்தமன்




(30.06.2026 தொடர்ச்சி)

நம் எண்ணங்கள் மிகவும் வலிமையானவை. அதனாலேயே நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே நீ ஆகிறாய் என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

ஆக, எண்ணங்கள்-சிந்தனைகள் எப்போதும் நேரியதாக, பெறுமதி உடையதாக இருக்க வேண்டும்.

மாறாக, எதிர்ச் சிந்தனைகள்-எதிர்மறையான எண்ணங்கள் பாதகமான விளைவைத் தரக்கூடியவை.

எனினும் துரதிஷ்டவசமாக ஈழத்தமிழர்களாகிய எங்களிடம் எதிர் மறைச் சிந்தனைகள் உச்சம் பெற்றுவிட்டன என்றே கூற வேண்டும்.

எதைக் கூறினாலும் அதனை எதிர்மனப்பாங்குடன் பார்க்கின்ற மனநிலைக்கு நாம் ஆளாகிவிட்டோம்.

இதுவே எங்களிடம் இருக்கக்கூடிய பெரும் பலவீனமாகும்.

இதனாலேயே எந்த நல்ல விடயங்களையும் நாம் நிறைவேற்ற முடியாதவர்களாக உள்ளோம்.

உதாரணத்திற்கு இந்திய மத்திய அரசினால் யாழ்ப்பாண மக்களுக்காக அமைத்துத் தரப்பட்ட திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தை யார்? நிர்வகிப்பதென்பது தொடர்பில் இன்னமும் ஒரு முடிவுக்கு வரமுடியாதவர்களாக நாம் உள்ளோம்.

அதுபோல யாழ்ப்பாணம் ஆரியகுளம் புனரமைக்கப்பட்டு மிக அழகாக மாற்றப்பட்டிருந்தது. எனினும் அதனை நிறைவேற்றிய யாழ் மாநகர சபை நிர்வாகம் பதவி இழந்தபோது, ஆரியகுளமும் பழைய நிலைக்கு வந்துவிட்டது.

இங்குதான் எங்களிடம் இருக்கக்கூடிய எதிர்ப்பு உணர்வுகள் எங்களை அதல பாதாளத்திற்கு இட்டுச் செல்கிறது எனலாம்.

உண்மை. பலாலி விமான நிலையத்தில் நடேசர் சிலையை நிறுவுவதற்கு அமைச்சர் சந்திரசேகர் தடை செய்வதாகக் குற்றம் சுமத்தப்படுகிறது.

அதேநேரம் பலாலி விமான நிலையத்தில் நடேசர் சிலையை நிறுவுவதற்கு பௌத்த சாசன அமைச்சு பச்சைக் கொடி காட்டியுள்ளது.

இங்குதான் பலாலி விமான நிலையத்தில் நடேசர் சிலையை நிறுவுவதற்கு அமைச்சர் சந்திரசேகர் எதிர்ப்புத் தெரிவிப்பது எதற்காக? என்ற கேள்வி எழும்.

பலாலி விமான நிலையத்தில் நடேசர் சிலையை பிரதிஷ்டை செய்தால், அது மதப் பிரச்சினையை ஏற்படுத்தும் என்பதாக அமைச்சர் சந்திரசேகர் கருத்துரைக்கிறார்.

அப்படியானால், நடேசரை நிறுவுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடியவர்கள் தமிழ் கிறிஸ்தவர்கள் என்பதை சந்திரசேகர் மறைமுகமாகக் கூறுகிறார்.

ஆம், நடேசர் சிலை தொடர்பில் கத்தோலிக்க-கிறிஸ்தவ மக்கள் எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை.

ஆனால், நடேசர் சிலையை பலாலி விமான நிலையத்தில் வைத்தால் கிறிஸ்தவ மக்கள் எதிர்ப்பார்கள் என்ற மனப்பிரமை அமைச்சர் சந்திரசேகரிடம் ஏற்பட்டுள்ளது.

இதற்குக் காரணம் எல்லாவற்றையும் எதிர்க்கின்ற-எல்லாவற்றையும் எதிர் மனப்பாங்குடன் நோக்குகின்ற எங்கள் மனநிலையை அமைச்சர் சந்திரசேகர் அறிந்து கொண்டதால், நடேசர் சிலை குறித்த விடயம் வெளிவந்தபோது, அதற்கு மதரீதியாக எதிர்ப்பு ஏற்படலாம் என அவர் ஊகித்துக் கொண்டு கருத்துரைத்தார் என்பதுதான் உண்மை.

இதுபோலவே நயினாதீவுக்குச் செல்கின்ற குறிகட்டுவான் இறங்குதுறையின் சுற்றுவட்டத்தில் நிறுவக்கூடிய சிலை தொடர்பிலும் இப்போது பொதுவெளியில் விவாதங்கள் களைகட்டியுள்ளன.

உண்மையில் குறிகட்டுவான் இறங்குதுறை சுற்றுவட்டத்தில் நயினை நாகபூசணி அம்பாளின் சிலையை நிறுவுவதுதான் ஏற்புடையது.

அதாவது குறிகட்டுவான் என்பது எங்கள் தமிழர் தாயகத்தின் முக்கிய இடம்.

அதேநேரம் குறிகட்டுவான் இறங்குதுறை என்பது நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்திற்குச் செல்வதற்கான ஓர் அடையாளம்.

அதேநேரம் சக்தி பீடங்களில் ஒன்றாக விளங்குகின்ற நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் வரலாற்றுத்தொன்மையும் சிறப்பும் மிக்கது.

ஆம், உலகம் முழுமையிலும் நயினைத்தாயை நினைந்து கொண்டு நம்மவர்கள் வாழ்கின்றனர் என்ற மிகப்பெரும் மகத்துவத்திற்குள், இரண்டாம் பேச்சுக்கு இடமில்லாமல், நயினை நாகஇராஜேஸ்வரித் தாயாரின் சிலையை குறிகட்டுவான் சுற்றுவட்டத்தில் நிர்மாணிப்பதுதான் நியாயமானது.

எனினும் எங்களுக்குள் பல்வேறு கருத்து முரண்பாடுகள் இருப்பதால், அப்படி... இப்படி... எனக் கடுமையாகச் சிந்தித்து எல்வாற்றையும் இழந்து போகின்றோம். இதுதான் எங்களின் யதார்த்தமான நிலைமை.

இதைநாம் இவ்விடத்தில் கூறுவதற்குக் காரணம்; நாம் ஒன்றுபட்டு-எங்கள் இடத்தில்-எங்களுக்காக-குரல் கொடுப்பதற்கு நாம் தயாரில்லை. இதனாலேயே எங்கள் நிலைமை மிகவும் மோசமாகி வருகிறது.

இந்த இடத்தில்தான் தையிட்டி விகாரை குறித்த எதிர்ப்புப் பற்றி நாம் அலசி ஆராயவேண்டியவர்களாக உள்ளோம்.

ஆம், தையிட்டி விகாரை சட்டவிரோதமாக அமையப் பெற்றதென்பது உண்மை. அவ்விதம் சட்டவிரோதமாக அமையப்பெற்ற விகாரைக்கான எங்களின் எதிர்ப்பும் நீண்டுவிட்டதென்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

அதாவது, தையிட்டி விகாரைக்கான எதிர்ப்பு என்பது நீண்டு செல்லும் போது அது எங்கள் தொடர்பில் பௌத்த சிங்கள மக்களிடம் மனச் சஞ்சலத்தை ஏற்படுத்தவே செய்யும்.

ஆம், இன்றைய சமகால சூழ்நிலையில் சிங்கள மக்களின் ஆதரவை நாம் ஏதோவொரு வகையில் பெற வேண்டியவர்களாக உள்ளோம். ஆயினும் அது பற்றி நம் சிந்தனை நேரியதாக இல்லை என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

(நாளை தொடரும்)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 5

காவியத் தொடர்

1077





இவ்விதம் இயற்கை அமைப்போடு இடைவிடாத செயற்கை முயற்சிகளும் சேர்ந்தே சோழ நாட்டைப் பண்டை நாளிலேயே நீர் வளத்தில் இணையில்லாத நாடாகச் செய்திருந்தன.

சோழ வள நாட்டுக்கு இவ்விதம் இயற்கை, விசேட உதவிகள் செய்தது போலவே, சில சமயம் விபரீதமான அபாயங்களையும் உண்டாக்கி வந்தது.

சோழ மண்டலத்துக் கடற்கரைக்குக் கிழக்கே கடலில் அடிக்கடி சுழிக் காற்றுகளும், புயற்காற்றுகளும் தோன்றுவது உண்டு. இக்காற்றுகள் சில சமயம் கடற்கரையோரமாக வடக்கு நோக்கிச் சென்று கிருஷ்ணை-கோதாவரி முகத்துவாரங்களிலோ அல்லது கலிங்க நாட்டிலோ, உள்ளே பிரவேசித்துப் பெருமழை கொட்டச் செய்து கடுமையான சேதங்களை விளைவிக்கும். வேறு சில சமயங்களில் சோழ நாட்டுக்குள்ளேயே நேரடியாகப் பிரவேசித்து மேற்கு நோக்கி விரைந்து செல்லும். கோடிக்கரைக்கும், கொள்ளிடக் கரையின் முகத்துவாரத்துக்கும் மத்தியில் இவ்விதம் சுழிக் காற்று உள்நாட்டில் பிரவேசிப்பது சரித்திரத்தில் பலமுறை நடந்திருக்கும் சம்பவம். சில சமயம் அச்சுழிக் காற்றுகள் கோரபயங்கர ரூபங்கொண்டு கடலையே பொங்கி எழச் செய்து கடற்கரையோரமுள்ள ஊர்களையே அழித்துவிடும்!

பூம்புகார் என்று வழங்கிய காவேரிப் பட்டினத்தைக் கடல் கொண்டது வெறுங்கதையன்று சரித்திர ஆதாரங்களினால் நிரூபிக்கக் கூடிய உண்மை நிகழ்ச்சியேயாகும்.

நதிகளில் வெள்ளம் அதிகமாக வரும்போது சில சமயம் கரைகள் உடைந்து விடுவதும் உண்டு. நதிகளின் நீர்மட்டத்தைக் காட்டிலும் பூமி மட்டம் தாழ்வாயிருக்கும் காரணத்தினால் உடைப்பு எடுத்தாலும் சுற்றுப்புறமெல்லாம் ஒரே தண்ணீர் மயமாகிவிடும். நதிகளுக்கு அருகிலுள்ள ஊர்கள் மூழ்கிப் போய்விடும். அப்போதெல்லாம் ஜனங்கள் உயிர் தப்புவதற்கு அக்கம்பக்கத்திலுள்ள கோயில்கள் உதவியாயிருக்கும்.

விஜயாலய சோழனின் மகன் ஆதித்த சோழன் காவேரி உற்பத்தியாகும் ஸஹ்ஸ்ய மலையிலிருந்து அந்த மாநதி கடலில் சங்கமமாகும் இடம் வரையில் நூற்றெட்டு ஆலயங்களை எடுப்பித்தான் என்று சரித்திரம் கூறுகிறது. சாதாரண காலங்களில் கோயில்கள் கடவுளை ஆராதிப்பதற்குப் பயன் படுவது போலவே, பெருவெள்ளம் வந்து உடைப்பெடுக்கும் காலத்தில் மக்கள் கோயில் மண்டபங்களின் மீது ஏறி உயிர் தப்புவதற்கும் உபயோகமாயிருக்கட்டும் என்பது ஆதித்த சோழனின் நோக்கமாக இருக்கலாம் அல்லவா?

நதிக்கரைகளில் உடைப்பு உண்டாவதன் காரணமாகச் சில சமயம் நதிகளின் போக்கே மாறிவிடுவது உண்டு. அரிசிலாறும், குடமுருட்டி முதலிய நதிகள் இப்படி பலமுறை இடம் மாறி, திசை மாறியிருக்கின்றன என்பதைப் பழைய வரலாறுகளிலிருந்து அறியலாம்.


இனி நம்முடைய வரலாறு நடந்த காலத்துக்கு வருவோம். இலங்கைத் தீவிலிருந்து சோழ நாட்டுக்குப் பார்த்திபேந்திரனுடைய கப்பல் வந்து கொண்டிருந்தபோது உண்டான சுழிக்காற்று, வந்தியத்தேவனை முன்னிட்டு இளவரசர் அருள்மொழிவர்மரைக் கடலில் குதிக்கச் செய்தபிறகு, கடலோரமாகவே சென்று கலிங்க நாட்டை அடைந்து மறைந்தது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அன்னப்பறவைகளும் வாத்துக்கூட்டமும்



(நேற்றைய தொடர்ச்சி)

அவைகள் சப்தம் எழுப்பியபடி வேடனை நோக்கி வந்தன. அவற்றில் சில வேடன் மீது பாய்ந்து அவனைத் தாக்க முற்பட்டன. அவன் முரட்டுத்தனமாக அவைகளை கீழே தள்ளி விட்டான். வாத்துகளின் சப்தம் பல மடங்கு அதிகரித்தது.

குடிலில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த துறவிக்கு வாத்துகளின் இரைச்சல் கேட்டது. வழக்கமான ஒன்றாக இல்லாமல் அதில் ஒரு அபாயம் ஒளிந்திருப்பதை அவர் உணர்ந்தார். ஏதோ தவறு நடக்கிறது என்பதைப் புரிந்து கொண்டார். அவர் குடிலை விட்டு வெளியே வந்தார். வேடன் அவர் கண்ணில் பட்டான். துறவி அவனிடம் "அன்னங்களை விடுவி!" என்றார்.

"ஐயா! நீங்க நினைக்குற மாதிரி நான் இவைகளைக் கொல்ல மாட்டேன்! அன்னங்களை தங்களோட வீட்டில் வளர்ப்பதை சில செல்வந்தர்கள் கௌரவமாக நினைப்பாங்க! நான் இவைகளை அவர்களிடம் நல்ல விலைக்கு விற்றுவிடுவேன்!" என்றான் வேடன். துறவி அவனின் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளவில்லை.

"எப்பேர்பட்ட செல்வந்தர்களாக இருந்தாலும் அவங்களால அன்னங்களுக்கு இது மாதிரியான இயற்கையான சூழலைக் கொடுக்க முடியாது! அன்னங்களை விடுவி!" என்று மீண்டும் ஒருமுறை அழுத்தமாகச் சொன்னார். இந்த வேட்டைத் தொழிலை விட்டுவிடச் சொல்லி அவர் வேடனுக்கு பலமுறை உபதேசித்திருக்கிறார். துறவியின் கோபம் அவனைச் சுட்டெரித்து விடும் என்பதை வேடன் நன்கு அறிவான். வேறு வழியின்றி அவன் அன்னங்களை விடுவித்தான்.

முதன்முறையாக அன்னப் பறவைகள் தங்களை அழகற்ற பறவைகளாக உணர்ந்தன. எந்த வாத்துக்களை அவைகள் வெறுத்தனவோ அந்த வாத்துக்கள் இப்போது அழகானவையாகத் தெரிந்தன. எந்த வாத்துகளின் குரல் நாராசாரமாகத் தோன்றியதோ இப்போது அந்தக் குரல் இனிமையாகத் தெரிந்தது. அவைகள் மட்டும் ஆபத்தில் உதவாமல் போயிருந்தால் வேடன் அன்னங்களை இந்நேரம் கொண்டு போயிருப்பான். நினைத்துப் பார்க்கவே அச்சமாக இருந்தது. அன்னப்பறவைகள் வாத்துக்களிடம் மனதார மன்னிப்புக் கேட்டுக் கொண்டன. உங்களுக்குத் தெரியுமா? இப்போது வாத்துக்களும் அன்னப் பறவைகளும் அதே தடாகத்தில் ஒன்று கூடி ஆடியும் பாடியும் மகிழ்ச்சியாக வாழ்கின்றன.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

~ திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தீவகத்திற்கான கடல்பயணத்தை ஒழுங்குபடுத்துவது கட்டாயமானது

தீவகத்தில் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களுக்குச் செல்வதற்கு கடல் வழிப்பயணம் மட்டுமே உண்டு.

அதிலும் குறித்த இடங்களுக்கான கடல் வழிப்பயணம் என்பது ஆழ்கடலாக இருப்பதனால், ஒவ்வொரு பயணத்தின் போதும் பயணிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.

அதிலும் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு நாள்தோறும் நூற்றுக்கணக்கானவர்கள் பயணம் செய்கின்றனர்.

தவிர, நயினாதீவு நாக விகாரைக்கு வருகின்ற சிங்கள மக்களின் எண்ணிக்கையும் இப்போது அதிகரித்து வருகிறது.

இது ஒரு புறமிருக்க, நயினாதீவு நாகபூசணி அம்மனின் மகோற்சவம் ஆரம்பித்துவிட்டால், பல்லாயிரக்கணக்கான அடியார்கள் நயினாதீவுக்குச் செல்வார்கள்.

தனித்து நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவிலுக்கு மட்டுமே அடியார்கள் செல்கின்றார்கள் என்றால் இல்லை. இந்த நேரத்தில் தான் நயினாதீவு நாகவிகாரைக்கும் தென் பகுதியைச் சேர்ந்த பெருந்தொகை மக்கள் வருகிறார்கள். இதனால் குறிகாட்டுவான் இறங்குதுறையில் பயணிகள் அலை மோதுவர்.

எனினும் கடந்த காலங்களில் நயினாதீவு மகோற்சவ காலத்தில் இறுக்கமான ஒழுங்குபடுத்தல்கள் செய்யப்பட்டதனால் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் பக்தர்கள் ஆலயத்திற்குச் செல்லக்கூடியதாக இருந்தது.

ஆயினும் இந்த வருடம் நயினாதீவு மகோற்சவத்தின் தேர்த்திருவிழாவின் போது ஒழுங்கு கட்டுப்பாடுகள் சீர்குலைந்து, நிலைமை எல்லை மீறிப் போனதை அவதானிக்க முடிந்தது.

ஆம், திருவிழாவிற்கு வருகின்ற பக்தர்கள் வரிசையாகச் சென்று படகுகளில் ஏறுவதற்கான ஒழுங்குபடுத்தலில் ஏற்பட்ட சீரின்மை, அடியார்கள் மத்தியில் பெரும் அல்லோல கல்லோலமாயிற்று.

இது தவிர, நயினை நாகவிகாரைக்குச் செல்கின்றவர்களுக்கு வரிசைக் கட்டுப்பாடு விதிக்காததன் காரணமாக நிலைமை இன்னும் மோசமானதென்றே கூற வேண்டும்.

இங்கு நாம் இவற்றைப் பிரஸ்தாபிப்பதற்குக் காரணம் 2026 ஆம் ஆண்டில் நயினாதீவு நாகபூசணி அம்மனின் மகோற்சவத்தின் போது பயணத்தில் ஏற்பட்ட குழப்பங்கள், அதற்கான காரணங்கள், எவ்விதம் அதை ஒழுங்குபடுத்தியிருக்க வேண்டும் என்பன தொடர்பில் அதிகாரிகளும் சம்பந்தப்பட்ட தரப்புகளும் கூடி இருந்து ஆராய்ந்து அத்தகைய குழப்பங்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் தடுப்பது தொடர்பில் முன்னாயத்தங்களை – திட்டமிடல்களை இப்போதே செய்ய வேண்டும் என்பதற்காகவே.

இது விடயத்தில் ஏனோதானோ என்ற நிலைமை இருக்குமாயின், குறித்த கடல் வழிப்பயணம் பேராபத்தாகி விடும். அப்போது அதற்கான முழுப்பொறுப்பையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் உத்தியோகத்தர்களுமே பொறுப்பேற்க வேண்டி வரும்.

ஆகையால் ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்து ஆராய்வது ஒரு சிறந்த முகாமைத்துவத்தின் பண்பாகும்.

அதேவேளை இத்தகைய மீளாய்வுக் கூட்டத்தில் பொலிஸ் அதிகாரிகள், கடற்படையினர், ஆலய பரிபாலன சபையினர் ஆகியோரின் பிரசன்னம் மிகவும் முக்கியமானதென்பதும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

# தாய்மொழியில் அரச சேவையைப் பெற ஒவ்வொரு குடிமகனுக்கும் உரித்துண்டு

## அரச படிவங்களை மும்மொழியில் வெளியிட்டு அமைச்சர் ஹர்ஷன உரை

(கொழும்பு)

அமைதியான இலங்கை ஒன்றை கட்டியெழுப்புவதாக இருந்தால், ஒவ்வொரு குடிமகனும் தனது தாய்மொழியில் அரசுடன் தொடர்புகொள்வதற்கான உரிமையை நடைமுறையில் உறுதிப்படுத்த வேண்டும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

“கிளீன் ஶ்ரீலங்கா” வேலைத்திட்டத்தின் கீழ், அரச அலுவலகங்களில் பொதுச்சேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் 23 பொது மாதிரி விண்ணப்பப் படிவங்களை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தயாரித்து இணையத்தில் வெளியிட்டு வைக்கும் ஆரம்பவிழா நேற்று (01) கொழும்பு 05, எல்விடிகல மாவத்தையில் உள்ள உத்தியோகபூர்வ வாசஸ்தல கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், எமது நாட்டில் நிலவிய யுத்தத்திற்கு மொழிப் பிரச்சினை ஒரு முக்கிய காரணமாக அமைந்தது.

அரச நிறுவனம் ஒன்றில் ஏதேனும் ஒரு சேவையைப் பெற்றுக் கொள்ளும்போது, தான் இரண்டாம் தரப் பிரஜை அல்ல, அனைவரும் சமமானவர்கள் என்ற உணர்வு ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டும்.

23 பொது மாதிரி விண்ணப்பப் படிவங்களை மூன்று மொழிகளில் வழங்குவது சிலருக்கு சிறிய காரியமாகத் தோன்றலாம். ஆனால், இவ்வாறான சிறிய நடவடிக்கைகளே பாரிய சமூக மாற்றங்களுக்கு அடிப்படை என்று நான் நம்புகிறேன்.

பல் கலாசார, பன்மொழி மற்றும் பல மதங்களைக் கொண்ட சமுகமாக, இலங்கையில் ஒவ்வொரு குடிமகனும் தனது தாய்மொழியில் அரச சேவைகளைப் பெறுவதற்கான உரிமையை உறுதிப்படுத்துவது அரசின் அடிப்படை சமுகப் பொறுப்பாகும்.

ஒரு நபர் அரச நிறுவனத்திற்கு வரும்போது, தனது மொழி காரணமாக பயமோ, அசௌகரியமோ அல்லது இல்லாமல் போகும் என்ற உணர்வு இருக்கக்கூடாது. அரசு என்பது அனைவருக்கும் சொந்தமான ஒரு பொது இல்லம். எனவே, அதன் கதவுகள் அனைத்து மொழிகளாலும் திறந்திருக்க வேண்டும். எதிர்காலத்தில் அனைத்து இன மக்களும் நம்பிக்கையுடன் வாழக்கூடிய அமைதியான இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டுமானால், இந்த வேலைத்திட்டத்தை நடைமுறையில் முன்னோக்கி எடுத்துச் செல்ல வேண்டும் என்றார். (ம-7)

## மஞ்சவனப்பதி முருகன் ஆலய தெற்கு இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம்

(கொக்குவில்)

யாழ்ப்பாணம், கொக்குவில் அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தின் சண்முகர் வாசலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தெற்கு இராஜகோபுரத்தின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 05ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அதன் பிரகாரம் மஹா கும்பாபிஷேகத்துக்கான விசேட கிரியைகள் நாளை (03) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.10 மணிக்கு விக்னேஸ்வர பூஜையுடன் ஆரம்பமாகவுள்ளன.

கும்பாபிஷேக தினமான ஞாயிற்றுக்கிழமை காலை 8.55 மணிமுதல் 10.49 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில், இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-7)

## இளைஞன் ஒருவர் வெட்டிப் படுகொலை

குருநாகல் பன்னலை பிரதேசத்தில் நேற்று முன்தினம்(30) செவ்வாய்க்கிழமை இரவு இளைஞர் ஒருவர் கூரிய ஆயுதங்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூரச் சம்பவத்தில் ரிதிகமை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய இளைஞரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

உயிரிழந்த இளைஞர் பன்னலை பிரதேசத்தைச் சேர்ந்த யுவதியைக் காதலித்து, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரே திருமணம் செய்துள்ளார்.

திருமணத்தின் பின்னர் அவர் பன்னலையில் உள்ள மனைவியின் வீட்டிலேயே வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில், நேற்றிரவு ஓட்டோவில் வந்த அடையாளம் தெரியாத மூவர், மேற்படி இளைஞர் மீது கொடூரமான முறையில் வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

பயங்கரக் காயங்களுக்குள்ளான இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7)

## கட்டணங்களை செலுத்த TIN இலக்கம் அவசியம்

### காணி சீர்திருத்த ஆணைக்குழு

(யாழ்ப்பாணம்)

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிகளைப் பயன்படுத்தும் பொதுமக்கள், தங்களின் கட்டணங்களைச் செலுத்துகையில் வரி செலுத்துநர் அடையாள இலக்கம் (TIN) சமர்ப்பிப்பது நேற்று (1) புதன்கிழமை முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளைப் பயன்படுத்தி வரும் பொதுமக்கள், அதற்கான வருடாந்த குத்தகைப்பணம், நில அளவைக் கட்டணம் மற்றும் ஆணைக்குழுவின் ஏனைய கட்டணங்களைச் செலுத்துவதற்காக அலுவலகத்திற்கு வரும்போது, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்படும் வரி செலுத்துநர் பதிவுச் சான்றிதழை (TIN Certificate) கட்டாயமாகக் கொண்டு வருதல் வேண்டும் என காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் வடக்கு வலயப் பணிப்பாளர் தி.விமலன் தெரிவித்துள்ளார். (ம-7)

## விபத்தில் இருவர் பலி

பொதுஹெர, பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு குருநாகல் வீதியில் ரஞ்சனகம சந்தியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (30) காலை கொழும்பிலிருந்து குருநாகல் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று அதற்கு எதிர்திசையில் வந்த பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் விபத்தில் காயமடைந்த நிலையில் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சுரேஷ் சலே தொடர்பான வழக்கு

# காணொளி ஊடாக முன்னிலைப்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பிப்பு



(கொழும்பு)

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேவை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 2 ஆம் திகதி காணொளி ஊடாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு - கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் சுரேஷ் சலே தொடர்பான வழக்கு இன்று எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

அத்துடன், மடிக்கணினி மற்றும் கையடக்கத் தொலைபேசி ஆகியவற்றின் கடவுச் சொற்களை, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணை அதிகாரிகளிடம் சமர்ப்பிக்குமாறும் சுரேஷ் சலேவுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (நி)

# உலக வங்கியிடமிருந்து இலங்கைக்கு நிதியுதவி






(வோஷிங்டன்)

இலங்கையின் பொருளாதார சீர்திருத்தத் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் உலக வங்கி 150 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை அங்கீகரித்துள்ளது.

மூன்று கட்டங்களாக முன்னெடுக்கப்படவுள்ள இந்தத் திட்டத்தில்,

முதல் கட்ட நிதியுதவி, அரசின் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வழங்கப்படுவதுடன், வர்த்தகத் தடைகளை குறைத்தல், முதலீட்டு சூழலை மேம்படுத்துதல் மற்றும் நிதித்துறையை வலுப்படுத்துதல் போன்ற முக்கிய சீர்திருத்தங்களை முன்னெடுக்க உதவும். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தைவிலைகள்

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 200 | 150 | 200 | 180 | 170 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | -- | 240 | -- | 350 |
| பச்சைமிளகாய் | 600 | 800 | 550 | 600 | 500 | 700 |
| தக்காளி | 800 | 700 | 620 | 600 | 700 | 550 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 150 | 200 | 200 | 160 |
| கோவா | 400 | 300 | 250 | 250 | 220 | 250 |
| கரட் | 450 | 450 | 380 | 400 | 450 | 370 |
| பூசணி | 150 | 150 | 100 | 160 | 120 | 220 |
| புடோல் | 200 | 200 | 200 | 200 | 150 | 250 |
| வாழைக்காய் | 140 | 100 | 120 | 160 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 400 | 400 | -- | 330 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | -- | 200 | -- | -- |
| பாகற்காய் | 1600 | 1500 | 1800 | 1400 | 1200 | -- |
| வெண்டக்காய் | 200 | 150 | 250 | 400 | 200 | 250 |
| கருணைக் கிழங்கு | 320 | 300 | 400 | 400 | -- | 350 |
| பயற்றங்காய் | 200 | 400 | 350 | 250 | 300 | 250 |
| லீக்ஸ் | 400 | 500 | 350 | 400 | 400 | 350 |
| பீற்றூட் | 450 | 600 | 400 | 500 | 400 | 500 |
| கறிமிளகாய் | 500 | 500 | 500 | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 350 | 600 | 400 | 500 |
| போஞ்சி | 500 | 600 | 600 | 500 | 450 | 450 |
| கத்தரிதம்புள்ள | 100 | 200 | -- | 180 | -- | -- |
| கீரை – 1 பிடி | 80 | 150 | 80 | 80 | -- | 40 |
| தேசிக்காய் | 400 | 500 | 350 | 450 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 150 | 110 | 100-140 | -- | 100 |
| இராசவள்ளி | 450 | 500 | 350 | 350 | -- | 300 |
| வெங்காயப்பூ | 350 | 500 | 420 | 480 | -- | -- |
| முள்ளங்கி | 160 | 200 | 180 | 200 | 200 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 150 | -- | 60 | -- | 50 |
| வல்லாரை | 70 | 100 | -- | 100 | -- | 45 |
| ஈரப்பலா | -- | 150 | -- | 240 | -- | -- |

# இராசிபலன்

02.07.2026
ஆனி 18, வியாழக்கிழமை
துதியை முற்பகல் 9.12 மணி வரை
உத்தராடம் முற்பகல் 9.32 மணிவரை

சுப நேரம்- 7.26- 8.56 மணிவரை
இராகு காலம் 1.26-2.56
சுப முகூர்த்த நாள்

சந்திராஷ்டமம்-
புநர்பூசம்

**வளவன்**

**மேஷம்** பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருங்கால நலன் கருதி எடுத்த புதிய முயற்சிகள் வெற்றி பெறும் நாள்.

**கடகம்** நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு கிடைக்கும், வெளியூர்ப் பயணங்கள் கை கூடும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணலாம்.

**துலாம்** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வாகன சுகமுண்டு, நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** தொட்ட காரியங்களில் வெற்றி பெற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், கண்ணியம் மிக்கவர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், பயணத்தால் பலனுண்டு.

**ரிஷபம்** குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், பயணங்கள் கை கூடும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** தொழிலில் முன்னேற்றமுண்டு, சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** பொது வாழ்வில் புகழ் கூடும், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பயணங்களால் பல்லுண்டு,சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்** சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள், மாற்றங்களால் ஏற்றமுண்டு, மனச் சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும்.

**மிதுனம்** தொழிலில் அதிகாரிகள் மனக் கசப்பிற்கு ஆட்பட நேரிடலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**கன்னி** தொழிலில் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், மன நிறைவு கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்.

**தனுசு** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் புகழ் கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**மீனம்** அதிஷ்ட வாய்ப்புக்கள் அலை மோதும் நாள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பணவரவு திருப்தி தரும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**சிக்கனமும் சேமிப்பும் வாழ்க்கையின் தரத்தை உயர்த்தும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## புதிய கட்டடப்...

உடனடியாக மீண்டும் ஆரம்பித்து நிறைவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 15 முக்கிய தீர்மானங்களில் ஒன்றாக இத்தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடி சூழல் காரணமாக, யாழ். மாநகர சபைக் கட்டடத்தின் இரண்டாம் கட்ட கட்டுமானப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில் விடுபட்ட எஞ்சிய பணிகளை விரைந்து பூர்த்தி செய்யும் நோக்கில் வரிகள் நீங்கலாக 1,958.85 மில்லியன் ரூபா (சுமார் 195 கோடி ரூபா) செலவில் இப்பணிகளை முன்னெடுப்பதற்கான ஒப்பந்தம் 'மத்திய பொறியியல் சேவைகள் நிறுவனத்திற்கு வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (ம-7)

## முன்னாள்...

காணாமல் போனதாக சபையின் செயலாளரால் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைய சிசீரிவியின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பாக முன்னாள் முதல்வர் உள்ளிட்ட சிலரைக் கைது செய்ய நீதிமன்றத்தின் அனுமதியை நேற்று கோரியிருந்தனர்.

இதன்போது பொலிஸாரின் கோரிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்திய வவுனியா நீதிவான் நீதிமன்றம் வவுனியா மாநகரசபை முன்னாள் முதல்வர் சு.காண்டீபன் உட்பட நான்கு பேரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த அனுமதி வழங்கியுள்ளதாகவும் அதில் பெண் ஒருவரும் உள்ளடங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் குறித்த பொருட்களை கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்ட சொகுசுக்கார் தொடர்பாகவும் நீதிமன்ற அனுமதியுடன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,250)

## அவசரகால...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் இறுதியில் ஏற்பட்ட டித்வா புயல் பேரழிவு மற்றும் மீட்புப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் நாட்டில் பொது அவசரகால நிலை அமுல்படுத்தப்பட்டு பல்வேறு சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இலங்கைத்...

தமிழக அரசுத் தலைமைச் செயலகத்தில் குறித்த சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டதோடு, இலங்கைத் துணைத் தூதுவரினால் முதலமைச்சருக்கு மலர்க்கொத்து வழங்கி வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டன. (ம-7)

## பேருந்து...

இதன்படி ஆகக் குறைந்த கட்டணம் 30 ரூபாவில் இருந்து 34 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 5 ஆம் திகதி நள்ளிரவு முதல் இந்தக் கட்டணத் திருத்தம் நடைமுறைக்கு வரவுள்ளது.

சாதாரண சேவையின் கீழான பேருந்துக் கட்டணத்தை 100 கிலோமீற்றருக்கும் குறைந்த பயணத்தூரத்திற்கு 12 சதவீதத்தினாலும் 100 அல்லது அதற்கும் மேற்பட்ட கிலோமீற்றருக்கான பயணத்தூரத்திற்கு 20 சதவீதத்தினாலும் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் சொகுசு பேருந்துகளுக்கான கட்டணத்தை முதல் 100 கிலோமீற்றருக்கான பயணத்தூரத்திற்கு 12 சதவீதத்தினாலும் 100 கிலோமீற்றருக்கும் அதிக பயணத்தூரத்திற்கு 15 சதவீதத்தினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## விபரீத...

கதிரைமலைநாதன் கமலநாதன் (வயது - 45) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## 78 கிலோ...

பயணம் செய்த நபரே கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 31 வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டவராவார்.

நெடுங்கேணிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,250)

## மிளகாய்த்தூள்...

நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ம-7)

## நயினை...

கடலில் குதித்து பிரஸ்தாபப் பெண்ணைக் காப்பாற்றினார்.

இச்சம்பவம் அப்பகுதியில் சிலமணித்தியாலங்கள் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதேவேளை பிரஸ்தாபப் பெண் தென்பகுதியில் இருந்து நயினை நாகவிகாரைக்கு வழிபாடு செய்ய தனது குடும்பத்துடன் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடலில் குதித்துப் பெண்ணைக் காப்பாற்றிய கடற்படை வீரர், தனது கையடக்கத் தொலைபேசியைக் கூட வெளியில்எடுத்து வைக்காமல் கடலில் குதித்து விரைந்து செயற்பட்டதனால் அந்தப் பெண்ணின் உயிர் காப்பாற்றப்பட்டதாகஅங்கு நின்றவர்கள் பிரஸ்தாப கடற்படை வீரரின் செயலைப் பாராட்டினர். (ந)

## விரை...

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்று கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


“மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் நிலவும் சட்டரீதியான சிக்கல்களை நீக்குவது குறித்து தற்போது பாராளுமன்ற விசேட குழுக்கள் மூலம் விரிவாக ஆராயப்பட்டுவருகிறது. தேர்தல் சட்டத்தில் கொண்டுவரப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் மற்றும் திருத்தங்களை பாராளுமன்றம் எவ்வளவு காலத்தில் பூர்த்தி செய்கிறதோ, அதனைப் பொறுத்தே தேர்தலுக்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் அமையும். தேர்தலை நடத்துவதற்கான திகதியை அறிவிக்க முடியும்.

நீண்டகாலமாகப் பிற்போடப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தல்களை எவ்விதத் தாமதமும் இன்றி, விரைவாக நடத்தி முடிப்பதற்கே தற்போதைய அரசாங்கம் விரும்புகின்றது” என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்தார். (ம-7)

மஹஜன சம்பத — திகதி 2026.07.01 — சீட்டிழுப்பு இலக்கம் 6235 — C 4 4 4 7 2 7
அத சம்பத — C 4 7 2 7 — சீட்டிழுப்பு இலக்கம் 0810
சுப தவசக் — திகதி 2026.07.01 — சீட்டிழுப்பு இலக்கம் 8351 — கடகம் 25 37 39 — 2144
தன நிதானய — திகதி - 2026.07.01 — சீட்டிழுப்பு இலக்கம் - 2265 — Z 23 45 56 57 Z
மெகா பவர் — திகதி 01/07/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2583 — T 01 12 48 51 76
ஜய — 2026.07.01 — 0503 — T 6 3 6 7
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4477 — சீட்டிழுப்பு திகதி 01.07.2026 — I 13 16 21 72
ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.07.01 — சீட்டிழுப்பு இலக்கம் 1544 — மீனம் 27 45 50 54 மீனம்
உத்தியோகபூர்வ முடிவுகள் — 01.07.2026 — வெற்றி வாரம் 0943 — J 6 7 2 0 0 0 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,864,609.60
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3209 — 25000 பணப் பரிசு 60340 — சீட்டிழுப்பு திகதி 2026.07.01 — தினம் புதன்கிழமை — 05 29 60 62 C — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,366,928.00
சனிதா — திகதி 01.07.2026 — வெற்றி வாரம் 5370 — 22 34 60 61 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,951,610.80 — 83382
சசிரி — வெற்றி வாரம் 1039 — சீட்டிழுப்பு திகதி 01.07.2026 — புதன்கிழமை — 21 24 30 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,878,120.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4921 — சீட்டிழுப்பு திகதி 01.07.2026 — தினம் புதன்கிழமை — 36 47 53 59 கன்னி — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,334,836.80
ஜெபிரெ — S 06 11 27 41 61 — 2385 — 01.07.2026 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.306,142,146.00
அத கோடிபதி — புதன்கிழமை — வெற்றி வாரம் 3035 — சீட்டிழுப்பு திகதி 2026.07.01 — 14 18 26 50 E — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,413,278.40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்

1948 - 10 - 15

மறைவு

2026 - 06 - 27

# ஆறுமுகம் தர்மராசா (காந்தன்)

சரவணையைப் பிறப்பிடமாகவும் சங்குவேலியை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தர்மராசா (காந்தன்) அவர்கள் கடந்த 27.06.2026 சனிக்கிழமை அன்று இறைபதம் எய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற செல்லப்பா - உருத்திரவதி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புஸ்பலீலாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவஞானம், அன்னலச்சுமி, கிருபாலினிதேவி, தவக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சதீஸ்ராஜா (அவுஸ்திரேலியா), தயாளன் (பிரான்ஸ்), தவநந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அருந்தவச்செல்வி (அவுஸ்திரேலியா), கீர்த்திகா, சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் சயந்தினி - கிருஸ்ணசந்திரா (அவுஸ்திரேலியா), சர்வினி - அருட்செல்வன் (அவுஸ்திரேலியா), அபிஸ்ணன், சன்சயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆதிரன், அகானா, அகான் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2026) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்த ரோடை சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்
076 930 6468

(7954)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191 [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media